# செம்பதாகை

மலர் 3
இதழ்: 1
1981 தை
விலை சதம்: 75

புரட்சிகர வெகுஜன ஏடு


# ஜே. ஆரின் சிங்கப்பூர் எமக்கு வேண்டாம்!

அடுத்த பத்து ஆண்டுகளில் இலங்கையை ஒரு சிங்கப்பூராக்கிவிடுவேன் என அண்மையில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன சூளுரைத்துள்ளார். இந்த சூளுரைப்பு தற்செயலான ஒன்றல்ல. இது நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டங்களின் வெளிப்பாடே ஆகும். இதையிட்டு நமது நாட்டின் ஜனநாயக — முற்போக்கு — தேசபக்த சக்திகள் மிக ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

அண்மையில் சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யீ தனிப்பட்ட விஜயம் எனக்கூறி இலங்கைக்கு வந்திருந்தார். மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருந்த அவர் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் மிக்மிக அந்தரங்கமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். இப்பேச்சுவார்த்தையின்போது ஏற்கனவே இலங்கையின் ''பொருளாதார அபிவிருத்திக்கு'' ஏற்றதென சிங்கப்பூர் பொருளாதார நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட முழுமையான அறிக்கை மிகவும நுணுக்கமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்த அறிக்கை வெறும் பொருளாதார அபிவிருத்திக்கானது மட்டுமன்றி அரசியல் ரீதியாக நமது நாட்டில் செயல்படுத்தவேண்டிய திட்டங்களையும் உள்ளடக்கியதாகும். இவற்றையெல்லாம் மனப்பூர்வமாகக் கலந்துரையாடி புத்திமதிகளை நன்கு செவிமடுத்தபின்பே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அடுத்த பத்து வருடத்தில் 'இலங்கையை சிங்கப்பூராக்குவேன்' எனத் திடமாகக் கூறியுள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் தான் பதவிக்கு வந்தால் இலங்கையை அடுத்தசிங்கப்பூராக்குவேன் எனச் சபதம் ஏற்றிருந்தார் ஜே. ஆர். அவ்வாறு அவர் பதவிக்கு வந்ததும் அதற்கான சகல முயற்சிகளையும் எடுத்துக் கொண்டார். ஏற்கனவே உருவாக்கிய திட்டங்களை ஒவ்வொன்றாக நடைமுறைக்குக் கொண்டுவந்தார். எவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழுமையான திட்டத்தின்கீழ் சிங்கப்பூரின் அரசியல் - பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டனவோ அதேபோன்று அமெரிக்க ஆலோசனையுடன் சிங்கப்பூர் நிபுணர்களால் நமது நாட்டின் அரசியல் பொருளாதாரத் திட்டங்கள் ஜே. ஆர். ஜயவர்த்தன மூலம் நடைமுறைக்கு வந்துள்ளன.

அந்நிய இராட்சத ஏகபோகக் கம்பனிகளுக்கு நமது நாட்டுக் கதவுகள் திறந்துவிடப்பட்டது தொடக்கம் சுதந்திரவர்த்தக வலயம், கட்டுப்பாடற்ற இறக்குமதி, தேவை ஏற்படும்போது அந்நியப்படைகள் வருவதற்கு அனுமதி, மக்களுக்கு இருந்த சகல மானியங்களையும் வெட்டியமை, குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளைச்சட்டத்தின்மூலம் பறித்தமை, அதையும்மீறியதொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டுள்ளமை, மக்களது ஜனநாயக உரிமைகள் உட்பட எதிர்க்கட்சியினரின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்டமை போன்ற சகலதும் ஏற்கனவே சிங்கப்பூர் பாணியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பொழுது ஜே. ஆர். - லீகுவான்யீ அந்தரங்கப்பேச்சுவார்த்தையும் அதன்வெளிப்பாடான அடுத்த பத்து வருடத்தில் இலங்கையை முழுமையான சிங்கப்பூராக்கும் சூளுரையும் இதன்இரண்டாவது கட்டத்தின் ஆரம்பத்தையே குறிக்கின்றது.

நமது நாட்டைச் சிங்கப்பூராக்கும் முதலாம் கட்டம் முடிவடைந்துள்ள-ஜே. ஆர். ரினதும் யூ. என். பி.யினதும்

[8-ம் பக்கம் பார்க்க)

# பிரதமரின் வடபகுதி விஜயம் பிசுபிசுத்தது!

## எதிர்ப்பும்-அதிருப்தியும்வெளிப்பட்டன!!

பிரதமர் பிரேமதாச தனது அமைச்சர் பரிவாரங்களுடன் ஐந்து நாள் விஜயத்தை மேற்கொண்டு வடபகுதிக்கு வந்திருந்தார். இவ் விஜயம் உத்தியோகபூர்வமானதும், அபிவிருத்தியைப் பார்வையிடுவதும் என்று கூறப்பட்ட போதிலும், யூ. என். பி.யின் கொள்கைகளை வடபகுதி மக்கள் எவ்வாறு அர்த்தப்படுத்திக் கொள்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளும் ஒரு அரசியல் நாடிபிடிப்பு விஜயம் என்றே கூறவேண்டும். இரண்டு மாதங்களுக்கு முன்பு திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு வடபகுதியில் கிடைத்த வரவேற்பை கண்டு அதிர்ந்துபோன யூ. என். பி. ஆட்சியும் அதன் தலைவர்களும் எப்படியும் அதை மிஞ்சிய விதத்தில் ஏதாவது செய்யவேண்டும் என்பதன் விளைவே பிரதமரின் வடபகுதி விஜயமாகும்.

பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்த பிரசாரங்களுடனும் சகல பத்திரிகைகளின் அளவுகடந்த விளம்பரங்களுடனும் தான் பிரதமரும் அவரது பரிவாரங்களும் வடபகுதி விஜயத்தை ஆரம்பித்தனர். கொழும்பிலும் அயல் மாகாணங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான கார்கள், ஜீப்வண்டிகள், ஏனைய வாகனங்கள் தருவிக்கப்பட்டன. அரசாங்க உயர் அதிகாரிகள் இரகசியப்-பரகசியப் பொலிசார் மற்றும் பாதுகாப்புபடையினர், பிரதமரின் சொந்தப் பாதுகாவலர்கள் வடபகுதியில் கட்டாயத்தின் பேரில் வரவழைக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் இந்த வகையை சேர்ந்தோர் சுமார் இரண்டாயிரம்பேர் வரையில் இருக்கலாம் என்பதே உண்மையான மதிப்பாகும். இவர்கள்தான் பலாலிவிமான நிலைய வரவேற்புத் தொடக்கம் யாழ். திறந்த வெளி அரங்கு களியாட்டப் பொதுக் கூட்டம்வரை திரண்டிருந்த 'வடபகுதிமக்களின்' பிரதான பகுதியினராவர். உண்மையான வடபகுதி மக்கள் நூற்றுக்கணக்கில்மட்டுமே பல வித காரணங்களினால் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர். வடபகுதியின் பெரும் பெரும் முதலாளிகளும், கொழும்பிலுள்ள பெரிய தமிழ் முதலாளிகளும் தத்தம் பணத்தை சுளைசுளையாக வீசி எறிந்து பிரச்சாரம் நடாத்தினர். கொழும்பு நகரின் தமிழ்ப் பெரும் முதலாளியான கே. ஜி. முதலாளி தாமே

(8-ம் பக்கம் பார்க்க)

சோவியத்-வியட்னும் ஆக்கிரமிப்பாளரை



தாக்கி அழித்தொழிப்பதற்கு காத்திருக்கும் ஒரு கம்பூச்சிய விடுதலைப்படை வீரன்

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# இரவில் கூடி பகலில் பிரியும் கூட்டணித் தலைமையின் முகமூடி கிழிகிறது!

காலத்துக்குக் காலம் தமிழர் வியாபாரக் கூட்டணியின் போக்கினையும் நடைமுறையினையும் விவரிப்பதற்கு ஏற்ற சொற்றொடர்களும், வாக்கியங்களும் அந்த அணியின் மத்தியிலிருந்து வெளிவந்திருப்பதைப் பலரும் அறிவர். சென்ற பொதுத் தேர்தல் முடிந்தபின் கூட்டணித் தலைமை ஜெயவர்த்தனாவின் வால்பிடிக்கத் தொடங்கிய சூழலில் கூட்டணிக் கவிஞர்களில் ஒருவர்தான், அன்றைய அதிருப்தியையும் அதிர்ச்சியையும் படம்பிடிப்பது போல:- ''கேட்டதோ தமிழ் ஈழம், கிடைத்ததோ யப்பான் ஜீப்'' என்று இரத்தினச்சுருக்கமாகப் பாடினார். ''ஜீப்'' என்பது தனியே வாகனத்தை மாத்திரம் குறிக்காது, நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தலைவர்கள் பெற்ற சலுகைகள் அனைத்தையும் — சராசரி மாதம் ஐயாயிரம் ரூபா வரையிலான வருமானங்களைக் குறித்தது. அலவன்சுகள் அதிகரிக்க அதிகரிக்க அவர்களின் குரல்களும் குன்றியே ஒலித்தன; கொடை கொடுத்த வள்ளலைப் பாடுவதுபோல ஜனாதிபதியையும் பிரதமரையும், ஏனைய அமைச்சர்களையும் அடிக்கடி கூட்டணித் தலைவர்கள் புகழ்ந்து தள்ளினர்.

இடதுசாரிகளுக்கும், சோஷலிஸ்டுகளுக்கும் இந்த பஜனைகள் ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. கூட்டணித் தலைவர்கள் பலரின் தனிப்பட்ட பலவீனங்கள் — தளர்பதி அமிரின் அதிகார மோகம் — ஆணவத் திமிர் இவை ஒருபுறமிருக்க, வர்க்கரீதியாகவும் தமிழர் வியாபாரக் கூட்டணி யூ.என்.பி. யுடனேயே குலவி வந்திருப்பதை வரலாறு அறியும். வர்க்க நலன்களும் தனிப்பட்ட வாழ்க்கைமுறைகளும் மனோபாவங்களும் கூட்டணி — யூ. என். பி. இசைவையே அடிப்படையில் உறுதிப்படுத்துவன. ஆயினும் பல்வேறு யதார்த்த காரணங்களினால் ஒன்றிணையாமல் இரவில் கூடியும் பகலில் பிரிந்தும் வாழும் ''கள்ளக் காதலர்கள்'' போல இரு தலைமைகளும் இயங்கிவருகின்றன.

இந்த நாடகத்தின் விளைவாகவே கூட்டணிக்குள் தீவிரவாத சக்திகளும், வேறுகுழுக்களும் வி. கூ. தலைமையுடன் முட்டிமோதிக்கொள்ள ஆரம்பித்தன. இந்த சூழ்நிலையில் மற்றொரு சொற்றொடர் கூட்டணிக்குள் உருவாகிப் பிரபல்யமாகி வருகின்றது. ''தலைமையின் இரட்டை வேடம்'' என்பதே அந்த வாக்கியம். ஒரு வேடமே நடிப்புக்கு சிரமம். இரட்டை வேடம் நடிப்பின் 'சிகரத்தை' காட்டுவதாகும். நாடாளுமன்றத்திலும், கொழும்பிலும், 'விருந்து — கேளிக்கை' வைபவங்களிலும் அமிர் குழுவினர் அசல் பிரமுகர்களாக வேஷம் தாங்கி ''தேசியப்'' பெருமக்களாக உலவுகின்றனர். நாடாளுமன்ற சலுகைகள் எதுவும் தள்ளப்படுவதில்லை. கார், ரெலிபோன், கிளார்க், போக்குவரத்து முதலிய யாவும் அனுபவிக்கப்படுவதற்கென்றே கருதப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திலும், நினைவு தினங்களிலும் அருகிவரும் பொதுமேடைகளிலும், தமிழ் 'விடுதலை' பற்றி வாயுபசாரத்துக்கு உச்சரிப்பதுண்டு. அதனால் தமிழ் மக்களை என்றென்றும் ஏமாற்றலாம் என எண்ணிக்கொண்டனர். ஜி.ஜி. பொன்னம்பலம் காலமுதல் இன்றுவரை இனம், மொழி, ஆகியவற்றை வைத்து அரசியல் வியாபாரம் செய்துவரும் 'தமிழ்த் தலைமை' இரட்டைவேடத்தை வெகு லாவகமாகத் தாங்கிவந்திருக்கிறது. தளர்பதி அமிர் அந்த நாடகத்தின் கடைசிக் காட்சியை ஆடிக்கொண்டிருக்கிறார். 'ஆம்' இரட்டை வேடம்.

## இடம் தெரியாமல் பேசியதால் மதுரை மாநாட்டில் வாங்கிக்கட்டினர்

ஜனாதிபதி வட்டாரங்களில் நடமாடும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உட்படப் பல அரசியல் அவதானிகள் இதனையே அண்மைக் காலங்களில் தனிப்பட்ட உரையாடல்களில் கூறிவருகின்றனர். அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் வியாபாரக் கூட்டணி தமிழ்மக்களையும் நாட்டையும் ஏமாற்றி தமது அந்தஸ்தையும் பதவிகளையும் காப்பாற்றிக்கொள்ளும் வகையிலேயே நடந்துகொள்கிறது என்பது வெளிநாட்டு அவதானிகள் கூற்று. சமீபத்தில் பிரேமதாஸ யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அமிர்தலிங்கம் கும்பல் நடந்தவிதம் இரட்டைவேடத்தின் மிகத் துல்லியமான வெளிப்பாடு என்பதை யாவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். கூட்டணிக் குட்டையிலேயே ஊறும் மட்டைகள் சற்று அதிருப்தியுடன் தலைமை. ''மதில்மேல் பூனை போல நடந்திருக்கிறது'' என்று பட்டும்படாமலும் கூறியிருந்தாலும் உண்மை என்ன? பொதுமக்கள் தழுவிய எதிர்ப்பு எதிலும் ஈடுபடாமல் அரசாங்கத்துக்குத் தமது உள்ளார்ந்த பயபக்தியையும் விசுவாசத்தையும் காட்டிக் கொண்டனர். தலைமை பகிஷ்கரிப்பில் பங்குபற்றாததால் பெரும் வணிகர்கள் 'ஒற்றைக்கதவு வியாபாரத்தில் ஈடுபட்டனர். அதே வேளையில் சிலவைபவங்களில் பங்குபற்றாமையால் தாமும் எதிர்ப்பில் ஈடுபடுவதாக மக்கள் முன் நடித்திருக்கின்றனர். ஆனால் இம்முறை 'முகமூடி' கிழிபட்டு விட்டது என்றே கூறவேண்டும். ''தமிழ்த்தலைமை'' இல்லாமலே தமிழ் மக்கள், பாசிஸ்ட் பிரேமதாஸாவுக்கு —வேலைநிறுத்த விரோதிப் பிரதமருக்கு தக்க எதிர்ப்புக் காட்டி அனுப்பியிருக்கின்றனர். இங்கு நடிக்கவேண்டி நேரிட்ட அரைகுறைஎதிர்ப்பு வேடத்திற்காகக் கொழும்பு சென்றதும் 'அமிர்—சிவசிதம்பரம் கும்பல்' பிரதமரைக் கண்டு விளக்கம் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொள்வார்கள் என்பதே பொதுமக்கள் கருத்தாகும். நவரத்தினம் போன்றவர்கள் இதில் வல்லவர்களாயிற்றே! எத்தனை நாட்களுக்கு இரட்டை வேடம்?

இன்று நாடு முழுவதும் விலைவாசிகளின் ஏற்றத்தால், வாழ்க்கைச் செலவினங்களின் அதீத அதிகரிப்பால், யூ. என். பி. ஆட்சியை விமர்சிக்கிறது; வெறுக்கிறது; கண்டிக்கிறது; எதிர்ப்பியக்கங்கள் உருவாகிக்கொண்டு இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கு மாறாக புகழ் பாடுவதானால் தமிழ்மக்கள் கூட்டணியை எவ்வாறு ஏற்க முடியும்? சலுகைகள் நிறையப்பெற்று வாழும் எம்.பி.க்களுக்கு வாழ்க்கைக் கஷ்டங்கள் தெரியாமலிருக்கலாம்.

## தமிழ் மக்களை இனிமேலும் ஏமாற்ற முடியாது

பாராளுமன்றத் தூதுக்குழுக்களில் மாறிமாறிப் பல நாடுகளுக்கும் சென்றுவரும் தமிழ் எம். பீ, க்களுக்கு 'தட்டுப்பாடு' என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கக்கூடும். ஜீப் வண்டிகளில் நிறம்மங்கி மாறிய கொடிகளுடன் ஓடித்திரியும் தலைவர்களுக்கு பாதை ஓரத்து மக்களின் துன்பங்கள் தெரியாமல் இருக்கக் கூடும். அபிவிருத்தியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், மகத்துவத்தைப் பற்றியும் அவர்கள் போதனைகள்செய்யலாம். ஆனால் மக்கள் நிலைப்பாடு வேறு. உணவுக் கஷ்டமே பெருங்கஷ்டம்!

இந்த இரட்டை வேடமனப்பான்மையுடனேயே அண்மையில் மதுரையிலும் கூட்டணிப் பிரமுகர்கள் நடந்துகொண்டனர். அதனாலேயே தமிழக முதல்வரிடம் சூடான 'புத்திமதிகளை கற்றுக்கொள்ள வேண்டி நேரிட்டது. இந்நாட்டு அரசாங்கங்கள் வழங்கும் சம்பளங்களையும் போக்குவரத்து தொடர்பான சாதன வசதிகளையும், பிற வாய்ப்புக்களையும் பிறநாட்டு உல்லாசப் பயணங்களையும் அனுபவித்துக்கொண்டு, 'விடுதலை' முழக்கம் செய்வதுபோலவே மதுரைக்குப்போன கூட்டணித் தலைவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழக அரசும் ஆளும் கட்சியும் அளித்த வசதிகளையும், உபசாரங்களையும் அன்பளிப்புக்களையும் நிறைவாக பெற்றுக்கொண்டு, அங்கு நின்று மேடை கிடைத்த குஷியில் பொறுப்பின்றி தமிழக முதல்வருக்கு தமிழ்மொழி பற்றியும், தமிழ் உணர்ச்சி பற்றியும், உலகத் தமிழர் பற்றியும் உபதேசம் செய்ய முற்பட்டனர். கூடியிருந்த உலக தமிழர் பிரதிநிதிகளின் முன் தாம் சுத்த சுயம்புவான தமிழ் வீரர்கள் போலவும், தமிழ்நாடு கோரிப் போரிடும் தியாகிகள் போலவும் நடித்தனர். ஜீப் வண்டிகளில் ஓடித் திரிந்த பழக்கத்தில் போலும் அங்கும் தனிக் கார்கள் கேட்டனர்; அது அந்தரங்கத்தில். வெளியே விடுதலை வீரர் வேடம்; மாலை வேளைகளில் எம். பி. க்கள் வேடம்; அரசியல் சலுகைகள். அதுமட்டுமல்ல. தி. மு. க. விற்கும், அ. தி. மு. க. வுக்கும் உள்ள பூசலில் கூட்டணியினர் பக்கம் சார்ந்து நடந்து வந்திருக்கின்றனர். தமிழ்மக்கள் என்ற முறையில் தமிழக மக்களை நோக்க வேண்டுமேயொழிய தமிழக அரசியலில் தலையிட்டிருக்கக் கூடாது. உதாரணமாக ஈரான் - ஈராக் பிணக்கில் பலஸ்தீனிய விடுதலை இயக்கம் நடுநிலை வகித்தது. அவ்வாறில்லாமல் தமிழக மக்களால், லஞ்சம், ஊழல், நேர்மையின்மை, அதிகார மோகம் ஆகியவற்றுக்காக நிராகரிக்கப்பட்ட கருணாநிதி கும்பலுடன் பகிரங்கமாக கூட்டணி இணைந்து செயல்படுவதும் முட்டாள்தனமான —அரசியல் விவேகமற்ற— நடைமுறையாகும். எம். ஜீ. ஆர். அளிக்கும் சலுகைகளும் மரியாதையும் வேண்டும்; நாடாளுமன்ற உபசரிப்புகளும் வேண்டும்; கருணாநிதியுடன் சேர்ந்து மேடைகளில் ஆர்ப்பரிக்கவும் வேண்டும்; விடுதலை வீரர்களாகக் காட்சியளிக்கவும் வேண்டும்; தமிழ்அறிஞர்களாகக் கருதப்படவும் வேண்டும்; இந்திராவுடனும் உறவாட வேண்டும்; ஜெயவர்த்தனாவையும் முகம் கோணாதபடி வைத்திருக்க வேண்டும். இவ்வளவையும் ஏககாலத்தில் செய்வதற்கு இரட்டை வேடமல்ல, பத்து வேடம்போடவேண்டும். இந்த அவதந்திரமே மதுரையில் அமிர் கும்பலுக்குமிக அந்தரமாய்ப் போயிற்று.

கூட்டணியினரின் இரட்டை வேடத்தைப் பொறுக்கமாட்டாத தமிழக முதல்வர் சம்பிரதாயங்களையும் பொருட்படுத்தாது சில 'கசப்பான உண்மைகளை உலகறியக் கூறிவைத்தார். எம். ஜி. ஆர். கூற்று ஆணித்தரமாயிருந்தது. கூட்டணியினர் தமது நாட்டிலேயே அரசியல் நேர்மை இல்லாதவர்கள்; உண்மையான தமிழ்மக்கள் ஒற்றுமையை நாடாதவர்கள்: பணக்காரக் கட்சியினர். அப்படியிருக்க, தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் ஒற்றுமைபற்றி குரல் எழுப்புவது போலி; இந்தியா இலங்கையின் உள்நாட்டு அரசியலில் தலையிட மாட்டாது. எனவே தமிழக அரசியல்வாதிகளும் மக்களும் ஈழவிடுதலைப் போருக்கு உதவவேண்டும் என்பது சர்வதேச அரசியலுக்குப் பொருந்தாத வீண் குரல்! கூட்டணியினர் தமிழக அரசியலில் அத்துமீறிப் பிரவேசிப்பது போல தமிழக அரசாங்கம் பிரவேசிக்கமாட்டாது. ஒரு சமூக மக்களின் விடுதலை அம்மக்கள் தாமாக போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டியது. பிறர் பெற்றுத்தரமுடியாதது. இவையே தமிழக முதல்வர் கூறிய கருத்துக்கள். நிதானமாக உலக அரசியலை அணுகும் எவரும் இதில் உண்மையும் நியாயமும் இருப்பதை ஒப்புக்கொள்வர். இவையெல்லாம் எமக்கு ஒன்றைத்தான் தெளிவாகக் காட்டுகின்றன. தமிழர் வியாபாரக் கூட்டணித் தலைமையின் போலித்தனமும், இரட்டை வேடமும், மக்களை ஏமாற்றும் போக்கும் இந்நாட்டிலும் தமிழகத்திலும் நன்கு தெரியத் தொடங்கிவிட்டன. எத்தனை நாளுக்கு ஏமாற்றி அரசபோகத்தில் வாழமுடியும்? மூலபலம் முறியும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. கொழும்போ, யாழ்ப்பாணமோ, மட்டக்களப்போ, மதுரையோ, சென்னையோ பொதுமக்கள் போலித்தனத்தையும் மாய்மாலத்தையும், இரட்டை வேடங்களையும் காலகதியில் இனம் கண்டு கொள்வார்கள் தானே. அதுதான் இப்பொழுது நடக்கிறது.

★

## அறிவித்தல்

பத்திரிகைத்தாள் விலை உயர்வினாலும், அச்சுக் கூலி உயர்வினாலும் செம்பதாகை பத்திரிகையின் விலையை 1981 ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து 75 சதமாக உயர்த்தியுள்ளோம் என்பதனை எமது வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம். செம்பதாகையின் வளர்ச்சிக்கு வாசகர்கள், அனுதாபிகள், விற்பனையாளர் தொடர்ந்தும் உதவ வேண்டுமென வேண்டுகின்றோம்.

—நிர்வாகி

# மதுரை தமிழாராய்ச்சி மாநாடு

## ஒரு கண்ணோட்டம்

சோ. தேவராஜா

இவ்வாண்டு ஜனவரி மாதம் நான்காம் திகதியிலிருந்து பத்தாம் திகதிவரை மதுரையில் நடந்து முடிந்த உலகத்தமிழ் மாநாடு இன்னும் பல வட்டாரங்களில் எதிரொலிகளைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது. மாநாட்டின் பெறுபேறுகளை எடைபோடுவதில் சில ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டிருக்கும் அதே வேளையில், பத்திரிகைகளில் விவரணக் கட்டுரைகள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழகச் சட்டசபையிலே தமிழ் மாநாடுபற்றி தி.மு.க. உறுப்பினர்கள் கேள்விகளைக் கணைகள் தொடுப்பதும், அ.தி.மு.க. தலைவர்கள் பதிலும் சமாதானமும் கூறுவதும் நாம் பார்க்கக் கூடியதாய் உள்ளது. மாநாட்டுக்குப் பிரதிநிதிகளாக வந்திருந்த அமெரிக்க - ஐரோப்பிய ஆய்வாளர்கள் தெரிவித்த விமர்சனங்களையும் கண்டனங்களையும் அதிருப்திகளையும் தமிழ்நாட்டின் ஆங்கிலப் பத்திரிகைகள் முக்கியமளித்தும் பிரசுரித்திருக்கின்றன. தமிழர் கூட்டணி சம்பந்தமாகவும், வாதப்பிரதிவாதங்கள் அவர்கள் பத்திரிகைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்த மாநாடு, அதாவது ஆறுவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு எங்கு எப்பொழுது நடைபெறும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படாமலே மதுரை மாநாடு முடிந்தது. இத்தகைய சூழ்நிலையிலே மதுரை மாநாட்டைப்பற்றி மதிப்பீடு செய்து எழுதுவது இலகுவல்ல. அதிலும் ஒரு பார்வையாளனாக, சிறிது தூரத்தில் நின்று, விடயங்களைக் கவனித்த நான் மாநாட்டு ''உள்ளார்ந்த விடயங்கள்' குறித்து எழுத முடியாது. ஆனால் மதுரை நகரில் தங்கியிருந்து, காமராசர் பல்கலைக் கழகத்திலே நடந்த ஆராய்ச்சி கருத்தரங்கினையும், மதுரை பந்தயத் திடலிலே சுமார் முப்பதினாயிரம் பேர்கள் அமரக்கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் அலங்காரப் பந்தலில் நடைபெற்ற பொது மக்களுக்கான இலக்கிய நிகழ்ச்சிகளையும் மாலை வேளைகளில் மதுரையில் இடம்பெற்ற பல்வேறு கலை இலக்கிய நிகழ்ச்சிகளையும், ஊர்வலத்தையும் ஓரளவு பார்த்தவன் என்ற வகையில் சில அவதானிப்புகளையும் கருத்துக்களையும் கேள்விப்பட்டன வற்றையும், இக்கட்டுரையிலே பொது நிலையில் நின்று எழுத முயன்றுள்ளேன்.

உலகின் பல பாகங்களிலிருந்து சுமார் 28 நாடுகளிலிருந்து எழுநூறு பிரதிநிதிகள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் கூடி ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்து விவாதித்து தமிழியல் ஆய்வில் ஈடுபட்டனர். குழுக்களாகப் பிரிந்து நடந்த கருத்தரங்குகளில் சுமார் 225 கட்டுரைகள் படிக்கப்பட்டன. பெரும்பாலான ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வாசிக்கப்பட்டன. கட்டுரைகளின் சுருக்கம் அச்சிடப்பட்டு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டன. ஏறத்தாழ 3,500 பேர்கள் தமிழில் ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்கள் — தொல்காப்பியர் அரங்கிலே பார்வையாளர்களாக அமர்ந்து உரைகளைக் கேட்க ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பந்தலுக்கு எதிர்ப்புறத்தே தெருவுக்கு அப்பால், சென்னையிலிருந்தும், பம்பாய், புதுடில்லி முதலிய நகரங்களிலிருந்தும் வெளியீட்டாளர்கள் தமது புத்தகங்களைக் கொண்டுவந்து வரிசையாகக் கடைகள் போட்டிருந்தனர். பார்வையாளர்களும் பிரதிநிதிகளும் இடைக்கிடை புத்தகக் கடைகளுக்கு சென்று புதியபுதிய நூல்களைப் பார்க்கவும் வாங்கவும் வாய்ப்பாக இருந்தது. பிரதிநிதிகளுக்கு வேளைக்குவேளை பல்வேறு நிறுவனங்களால் உணவு உபயஞ் செய்யப்பட்டது. அந்த வகையில் பல்கலைக் கழகத்து கருத்தரங்கிற்கான ஒழுங்குகள் திருப்திகரமாகச் செய்யப்பட்டிருந்தன என்பதே பெரும்பாலான பிரதிநிதிகளின் அபிப்பிராயமாககாணப்பட்டது. அரசு இயந்திரம் சுறுசுறுப்பாகவும் சமயோசிதமாகவும் செயற்பட்டு பிரதிநிதிகளின் பாராட்டைப்பெற்றுக்கொண்டது.

எந்த ஒரு பிரதிநிதியோ பார்வையாளரோ அல்லது என்போன்று சற்றுதூரநின்ற அவதானியோ கருத்தரங்கு முழுவதையும் கண்டு கேட்டிருக்க முடியாது. பன்னிரண்டு குழுக்களாக வெவ்வேறு இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளை எப்படி ஒருவர் ஏககாலத்தில் பார்க்க முடியும்? படிக்கப்பட்ட கட்டுரைகள் நூல்வடிவிலே வெளியிடப்படும் பொழுதே விடயங்களை விமர்சிக்க முடியும். ஆயினும் நிகழ்ச்சி நிரலைப் பார்த்தளவில் சில குறிப்புக்களைக் கூறலாம்.

அநேகமான கட்டுரைகள் பழைய தமிழ் இலக்கிய இலக்கணங்கள் சம்பந்தமாகவும், சமய சம்பந்தமானவையாகவுமே காணப்பட்டன. மொத்தத்தில் இரண்டொரு கட்டுரைகளைத் தவிர ஏனையவற்றிலே சமூக நோக்கும், கொள்கைரீதியானதிறனாய்வு அணுகுமுறையும் காணப்படவில்லை என்பதே விஷயமறிந்த சில பிரதிநிதிகளின் தீர்ப்பாக இருந்தது.

பல்கலைக்கழக கருத்தரங்கிலே காணப்பட்ட மற்றுமொரு பலவீனம் அல்லது குறைபாடு. தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களிலுள்ளபல ஆய்வாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளாததாகும். குறிப்பாக அனுபவமிக்க வி. ஐ. சுப்பிரமணியம், முத்து சண்முகம்பிள்ளை போன்றோர் உரிய இடத்தைப் பெறவில்லை, தமிழகத்துக்குள்ளேயிருந்து விண்ணப்பித்தபிரதிநிதிகளைத் தெரிவு செய்ததில் பாரபட்சம் இருந்திருக்குமோ என்று எண்ணுமளவிற்கு பல பெரும்புள்ளிகள் மாநாட்டிலே காணப்படவில்லை. வரலாற்றுத் துறையிலும் மாநாட்டின் பங்களிப்பு குறைவு என்றே கூற வேண்டும். ஐரோப்பாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் சென்ற ஆய்வாளர்களின் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கதாய் இருந்த அளவிற்கு தமிழ்நாட்டுக் கட்டுரைகள் இல்லை என்பதே பலநடுநிலை அவதானிகள் கருத்து.

எந்த ஒரு நிகழ்ச்சியிலும் இயக்கத்திலும் மாறுபட்ட ஓட்டங்களும் போக்குகளும் இருப்பது இயல்பே அதற்கு ஏற்ப கருத்தரங்கிலும், இரு எதிரெதிர் ஓட்டங்கள் தென்பட்டன. நவீன ஆராய்ச்சிகள் மேல்நாட்டு முறைகளைப் பின்பற்றுகின்றன என்றும், தமிழின் தனித் தன்மையையும் தொன்மையையும் மறந்துவிடுகின்றன என்றும் பழமைவாதிகள் அடிக்கடி உரத்துக்கூறினர். மதுரைப் பல்கலைக்கழக உபவேந்தர் வ. சுப. மாணிக்கமும் இத்தகைய பிற்போக்குக் கருத்துக்களை மேடையில் முன்வைத்தார். அந்தக்குரலே பெருமேடைகளில் ஓங்கி ஒலித்தது. ஆயினும் சிட்டிபாபு, வி.சி. குழந்தைசாமி முதலியோர் விஞ்ஞானரீதியான கருத்துக்களை முன்வைக்கத் தவறவில்லை. அவை அவ்வளவு அதிகமாக இருக்கவில்லையே என்ற கவலை என்போன்றோர்க்கு ஏற்படத்தான் செய்தது.

> ஆராய்ச்சிகளில் சமூக நோக்கு இருக்கவில்லை
>
> ★
>
> பழமை வாதிகளின் குரல் ஓங்கி ஒலித்தது
>
> ★
>
> தமிழாய்வுக்கு குறுகிய எல்லைகள் இட எத்தனிப்பு
>
> ★
>
> திசை மாறிச் செல்லும் ஆபத்து
>
> ★
>
> வெறும் உணர்ச்சிகள் தமிழை வளர்க்க உதவமாட்டாது

நடைமுறை சாத்தியமான விடயங்களிலும் இம்மாநாட்டில் போதிய அக்கறை செலுத்தப்பட்டது என்று கூற முடியாது. உதாரணமாக எழுத்துச் சீர்திருத்தம் குறித்து சில நல்ல பயனுள்ள கட்டுரைகள் படிக்கப்பட்டன; அதற்கென தனியே ஒரு அரங்கும் இருந்தது. கொடுமுடி சண்முகம், இலங்கையரான வி. கோ. தில்லைநாயகம் போன்ற பொறியியலாளர் நூதனமான சில முறைகளைப்பற்றி விளக்கிப் பேசினர். ஆயினும் மொத்தத்தில் ஒரு உடன்பாடான கருத்து தோன்றவில்லை என்றே கூறவேண்டும். பெரியார் இராமசாமி நாயக்கரின் சில யோசனைகளை நடைமுறைப்படுத்தியதோடு தனது கடமை முடிந்தது என்றே தமிழக அரசு கருதுவது போல் தெரிகிறது. தமிழக அரசின்நிர்வாக யந்திரத்திலே மொழிச் சீர்திருத்தம் சம்பந்தப்பட்ட துறைக்கு கொண்டல் மகாதேவன் போன்ற ஈ.வே.ரா. பக்தர்கள் அமர்ந்திருப்பதும் இப்பின்னடைவுக்கு ஒருகாரணம் என்று சிலர் பேசிக்கொண்டனர்.

இம்மாநாட்டுக்கு முதன் முறையாக சீனாவிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். பீகிங் பல்கலைக் கழகத்து தெற்கு ஆசிய பிரிவைச் சேர்ந்த ஷங் வெய்யுன், பீகிங் வானொலி தமிழ்ப் பிரிவைச்சேர்ந்த ஷுசன் குவோசிபாங் ஆகிய இரு சீனப் பிரதிநிதிகளும் பலரது கவனத்தை ஈர்த்தனர். அவர்களில் ஒருவர் சீனக்கலைக்களஞ்சியத்துக்கு தமிழிலக்கியம்பற்றிய கட்டுரை எழுதிக் கொண்டிருப்பதாக கூறினார். சீனா போன்ற நாடுகளிலிருந்து புதிய புதிய பிரதிநிதிகள் வந்து உண்மையிலேயே உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு தனது பெயருக்கு இயைய உலகளாவிய முறையில் விரிவடையும் தருணத்திலேயே, அது திசைமாறிச் செல்லும் ஆபத்தும் காணப்படுகிறது,

தமிழ்நாட்டு, அரசியலிலும், சமூக வாழ்க்கையிலும், கலை இலக்கிய உலகிலும் நிலை கொண்டுள்ள பிற்போக்குவாதிகளும் சனதனிகளும், பழமை விரும்பிகளும் மாநாடு உலகம் தழுவிய விஞ்ஞானப் போக்கில் போவதை விரும்பவில்லை. எனவேதான் உலக தமிழ்ச்சங்கம் என ஒன்றை நிறுவி தமிழகப்புலவர் வட்டத்திற்குள்ளேயே தமிழ் ஆராய்ச்சியை சிறைப்படுத்த முற்பட்டிருக்கின்றனர். இத்தகைய திசைதிருப்பும் முயற்சியை முறியடித்த, உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஓர் உலகம் தழுவிய — உலகளாவிய — விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சி அரங்காக வைத்து வளர்ப்பது முற்போக்கு விரும்பிகளின் கடமையாகும்.

பல்கலைக்கழக கருத்தரங்கே பழமையின் தாக்குதலுக்கு இலக்காகியபோது. பந்தயத்திடல் நிகழ்ச்சிகள் எப்படி இருக்கும்? சிவஞான கிராமணியார் சிலம்பொலி செல்லப்பன்வரை, அரசவைக் கவிஞர் கண்ணதாசன்முதல் கம்பர் அடிப்பொடி சா. கணேசன்வரை அத்தகைய எடுபிடிகளும் எப்பொழுதும் எல்லோரும் கூறும் கருத்துக்களை கூறிச்சென்றனர், சில நயமான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பத்மா சுப்பிரமணியத்தின் நடனங்கள் புதுமையாயும் சிறப்பாயும் இருந்தன.

மாநாட்டை ஒட்டி பல நிறுவனங்கள் சிறப்பு மலர்களும் நூல்களும் வெளியிட்டன. தீக்கதிர் சிறப்பு மலர் வெளியிட்டது. இலங்கைப் பிரதிநிதிகள் சிலரும் அம் மலர் வெளியீட்டு வைபவத்தில் பங்குபற்றினர். பொதுவாக தமிழ்மாநாட்டை ஆதரிக்கும் அதே வேளையில், இடதுசாரிகளும், மாக்சிஸ்டுகளும் உண்மையான முற்போக்குவாதிகளும் தமிழ் ஆராய்ச்சி ஆரோக்கியமான நெறியில் செல்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது பற்றி சில முற்போக்கு அணிசார்ந்த இலக்கியக் கூட்டங்களிலே பேசப்பட்டது. அரசும், அ.தி.மு.க., தி.மு.க. போன்ற கட்சிகளும் மொழி உணர்ச்சியையே பிரதானப்படுத்தி அரசியல் இலாபம் தேடமுற்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. அதே வேளையில் தமிழுணர்ச்சி எழுப்பும் கட்சிகள்கூட தமிழகத்தில் (இலங்கையிலும்தான்) ஆங்கிலக்கல்வியையும், ஆங்கில புழக்கத்தையுமே ஆதரிக்கின்றன. மக்கள் மொழியை அவை மதிப்பதில்லை. ஆனால் சோஷலிஸ்டுகள் மக்கள் மொழியையே போதனா மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் காண உழைக்கின்றனர். இத்தகைய கருத்துக்கள் தமிழ்மகாநாட்டு வேளையிலே மதுரை மாநகரின் பல்வேறு பகுதிகளில் நடந்த முற்போக்கு அணிக்கூட்டங்களில் எடுத்துரைக்கப்பட்டன, இம் மாநாட்டிலே பொதுவில் இலங்கை ஆய்வாளர்களின் பங்களிப்பும் காத்திரமான கருத்துக்களும் கவனிக்கப்பட்டன. பல விடயங்களில் இலங்கை ஆய்வாளரின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டன. கடந்த இருபது முப்பது வருடங்களாக இலங்கையில் பல்வேறு இயக்கங்களினதும் போராட்டங்களினதும் அடிப்படையில் வளர்ந்துவந்துள்ள ஆக்க இலக்கியங்களின் தனித்தன்மைகளும், ஆழமான விமர்சன முறைகளின் முக்கியத்துவமும் இப்பொழுது தமிழ்நாட்டிலே பாதிப்பை ஏற்படுத்த தொடங்கியுள்ளன. நமது கலை இலக்கியங்களை அறிய பலர் உண்மையிலேயே ஆவலாயுள்ளனர், இந்த அடிப்படையில் சகோதரபூர்வமான — பயனுள்ள — மக்கள் சார்ந்த உறவுகளை எதிர்காலத்திலே அமைத்து வளர்த்துக்கொள்ள முடியும்.

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| 1-வருடம் | ... | 14-00 |
| 6-மாதம் | ... | 7-00 |
| தனிப்பிரதி | ... | -75 |

தொடர்பு:

'செம்பதாகை'
மேல்மாடி
15/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# தோட்டத்தொழிலாளர் பிரச்சினைகளை தொண்டமானால் தீர்க்க முடியாது!

## லுணுகலைக் கூட்டத்தில் தோழர் கரவிட்ட

'இந்திய வம்சாவளி மக்களில் ஒரேயொரு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியும், ஒரு பிரதான தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான திரு. தொண்டமான் ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் மந்திரிசபையில் மந்திரிப்பதவியெடுத்ததினால் இந்த நாட்டின் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. திரு. தொண்டமானுக்கு இது ஓர் அர்த்தமுள்ளதாக இருக்கலாம். ஆனால் தோட்டத் தொழிலாளருக்கு இதனால் ஒருவித பலனுமில்லை'.

மேற்கண்டவாறு உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச் செயலாளரும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடிச்சங்கத் தலைவருமான தோழர் எச். எல். கே. கரவிட்ட லுணுகலையில் அண்மையில் இடம்பெற்ற தோட்டத் தொழிலாளர்களின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போது கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களின் பெரும்பாலானவர்கள் இந்திய வம்சாவழியினர் என்பது உண்மையே. அதேவேளை தொண்டமான் ஒரு இந்திய வம்சாவளி என்ற காரணத்தால் அவர்களின் நலன்களுக்காகப் பாடுபடுவார் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு செய்வார் எனக் கருதினால் சிங்களத் தொழிலாளர்களுக்கு ஜே. ஆர். ரும், பிரேமதாசாவும் சிங்களவர் என்பதால் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள் என எதிர்பார்ப்பதற்கு ஒப்பாகும்.

இது வெறும் ஏமாற்றுத்தனமாகும். இந்தப் பிரச்சினையைப் பார்க்கும் சரியான முறை இந்தப் பிரமுகர்கள் எந்த வர்க்க நலன்களுக்காகச் சேவை புரிகிறார்கள் என்பதை அறிந்து பார்ப்பதில் இருக்கிறது. இறுதி ஆய்வில் திருவாளர்கள் ஜே. ஆர். ஜயவர்த்தனா, ஆர். பிரேமதாசா எஸ். தொண்டமான் ஆகியோர் ஒரேவர்க்க நலன்களுக்குச் சேவை செய்கிறார்கள். அதாவது இந்த நாட்டின் சுரண்டும் வர்க்கங்களுக்குச்சேவைசெய்யவே அவர்கள் ஒன்றுகூடியுள்ளார்கள்.

1980 யூலையில் இடம் பெற்ற வேலைநிறுத்தத்தின் போது தொழிலாளர்கள் மீது இவர்கள் நடந்து கொண்ட முறையிலிருந்து இவர்களது வர்க்கத்தன்மையைப் புரிந்துகொள்ள முடியும். தொழிற்சங்கத் தலைவர்கள் எனத் தம்மைத் தாமே தம்பட்டமடிக்கும் ஜே ஆர். ரும் தொண்டமானும் சம்பள உயர்வைப் பிரதான கோரிக்கையாக முன்வைத்து வேலைநிறுத்தம் செய்த ஒரு

## மாதச்சம்பளத்துக்கு மார் தட்டியவர் மந்திரிசபையில் என்ன செய்கின்றார்?

இலட்சம் தொழிலாளர்கள் வேலையை இழந்துவிட்டார்கள் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர்.

ஐ. நா. சாசனமும் சர்வதேச தொழில் நிறுவனமும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வது ஒரு தவிர்க்க முடியாத உரிமை எனக் கூறுகின்றது. ஏகாதிபத்திய நாடுகளிற்கூட வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை ஒரு முதலாளித்துவ ஜனநாயக உரிமையாக அங்கீகரித்துள்ளன. ஆனால் சர்வதேச தொழில் நிறுவனத்தின் பல மகாநாடுகளில் கலந்து கொண்ட திரு தொண்டமான் வேலைநிறுத்தக்காரர்மீதுநடந்துகொண்ட விதம் என்ன?

ஒரு வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டதற்காகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ள வேளை மௌனம் சாதிக்கும் ஒரு தொழிற் சங்கத் தலைவர் எப்படிப்பட்டவராக இருக்க முடியும். இ. தொ. க. வில் அங்கம் வகிக்கும் தோட்டத் தொழிலாளர்கள் சம்பளக் கோரிக்கையை முன்வைத்து வேலைநிறுத்தம் செய்யும் உரிமை அற்றவர்கள் என்பது திரு.தொண்டமானின் நிலைப்பாடா? அவ்வாறான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டால் அவர்களை வேலைநீக்கம் செய்வதற்கு தோட்ட அதிகாரிகளுக்கு உரிமை உண்டு என்பது அவரது நிலையா?

இப்போது தொண்டமானின் முகமூடி கிழிந்து விட்டது. அவர் ஜே. ஆர். ஜயவர்த்தனாவுடன் கூட்டுச் சேர்ந்து சுரண்டும் வர்க்கங்களின் கரங்களைப் பலப்படுத்தி இந்த நாட்டின் உழைக்கும் மக்கள்மீதும், வெகுஜனங்கள்மீதும் சுமைகளைக் குவித்துவருகிறார் என்பதைத் தொழிலாளர்கள் மேலும் மேலும் உணர்ந்து வருகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் மாதச்சம்பளம் தொடர்பாகத் தொண்டமான் செய்தது என்ன? நாங்கள் இதற்காகச் சென்ற அரசாங்கத்தின் காலம் தொட்டுக் கிளர்ச்சி செய்து வந்துள்ளோம். ஆனால் தொண்டமான் தானேதான் மாதச் சம்பளக் கோரிக்கையின் கதாநாயகன் என மார்தட்டி வந்தார். இப்போது மந்திரிசபையில் இருக்கும் அவர் ஏன் இதைச் செயலில்காட்ட முடியாது இருக்கின்றார். இன்று இது தொடர்பாக அவர் பேசுவதையும் அரியகவே குறிப்பிடுகிறார். அவர் தோட்டத் தொழிலாளர்களின் மாதச் சம்பளத்திற்காக தனது மந்திரிப் பதவியை இழக்கத் தயாராயில்லை என்பதே உண்மை நிலையாகும்.

நாம் மாதச் சம்பளக் கோரிக்கையை முன்வைத்து தொடர்ந்து போராடி வந்துள்ளோம். அரசாங்கமும் இந்த விடயம் தொடர்பாக விசாரிப்பதற்கு குழுக்களை நியமித்துத் தொழிலாளர்களை ஏமாற்றி வருகின்றது. நாட்சம்பளத்தை 26 நாட்களால் பெருக்கி ஏனைய கூட்டுத்தாபன ஊழியர்களுக்குள்ள வசதிகளும் சலுகைகளும் உள்ளடக்கியதான மாதச் சம்பளமே எங்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். மாதத்திற்கு 12 அல்லது 16 நாட் சம்பளத்தை 'மாதச் சம்பளமாக' வழங்கும் ஒரு போலி மாதச் சம்பளம் எங்களுக்கு தேவையில்லை. தொழிலாளர்கள் 26 நாட்களுக்கு வேலை செய்வதற்குத் தயாராயுள்ளார்கள். அவர்களுக்கு அத்தனை நாளுக்கும் வேலை கொடுக்க வேண்டும்.

மாதச் சம்பளக் கோரிக்கை வலுவடைய அரசாங்கம் என்ன செய்கின்றது. அது தோட்டத் துரைமாரிடம் மாதச் சம்பளம் வழங்கலாமா எனக் கேட்கின்றது. அவர்களோ தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதால் அது சாத்தியமில்லை என்று கூறுகின்றார்கள், இறுதியில் தொண்டமான் உட்பட அரசாங்கம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வழங்கலாமா என நிர்வாகத்திடம் கேட்கின்றது.

தோட்டங்கள் நட்டத்தில் இயங்குவதற்கு தொழிலாளர்களைக் குறைகூற முடியாது என்பதே எமது நிலையாகும். ஊழல், விரயம், பெருமளவான நிர்வாகச் சீர்கேட்டின் காரணத்தாலேயே நட்டம் ஏற்படுகின்றது. உங்களுடைய பிழைகளுக்காகத் தொழிலாளர்களைத் தண்டிக்க முடியாது.

தொண்டமான் தொழிலாளர்களுக்கு தவறிழைத்து விட்டார். மாதச் சம்பளம் ஒருபுறமிருக்க, நாம் தொடர்ச்சியாகக் கோரி வந்த ஆண் பெண் சம சம்பளக் கோரிக்கையையும் அவரால் பெற்றுத்தர முடியவில்லை. இறப்பர் தொழிலாளர்களைப் போலவே தேயிலைத் தொழிலாளர்களும் கஷ்டப்பட்டு வேலை செய்வதால் அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியத்தையே தேயிலைத் தொழிலாளருக்கும் கொடுக்கவேண்டும். இரண்டு பெரிய தொழிற் சங்கங்களின் தலைவர்களான காமினி திசநாயக்காவும், அமைச்சர் தொண்டமானும் மந்திரிசபையில் இருக்கின்ற போதும் இந்தக்கோரிக்கை கூட நிறைவேற்றப்படவில்லை.

இந்தியாவில் அண்மையில் பேசும்போது தொண்டமான் இந்நாட்டின் பதிவு செய்யப்பட்ட பிரஜைகளும் வம்சாவளிப் பிரஜைகளும் சமமான உரிமைகளையும், சலுகைகளையும் அனுபவித்து வருகின்றனர் எனத் தெரிவித்திருந்தார். இது வெறும் பொய். வம்சாவளி இலங்கைப் பிரஜை ஒருவர் ஒரு ஆங்கிலேயரை, யப்பானிய அல்லது ஜேர்மன் பிரஜையைத் திருமணம் செய்து அவரை இங்கு கூட்டி வந்து வாழலாம்; ஆனால் ஒரு பதிவு செய்யப்பட்ட பிரஜை ஒரே லயத்தில் வாழும் இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவரைத் திருமணம் செய்ய முடியாது. ஏனெனில் அவ்வாறு செய்தால் சம்பந்தப்பட்ட பிரஜை அல்லாத நபர் நாட்டைவிட்டு வெளியேற்றப்படமாட்டார் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

இது ஒரு மனிதப் பிரச்சினை. சிறிமாசாஸ்திரி உடன்படிக்கையை மாற்றியமைக்க அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர் இலங்கைப் பிரஜையைத் திருமணம் செய்தால் அவர் இலங்கைப் பிரஜா உரிமையைப் பெற முடியும் என்பதற்கான வகை செய்யப்படல்வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

# ஆண்ட பரம்பரையின் வாரிசுகள் சாதி முறையை பாதுகாக்கின்றனர்

ஈழத் தமிழர் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினர், அதாவது ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் சாதி—தீண்டாமையால் புறக்கணிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்படுபவர்களாவர் என்பது உலகறிந்த உண்மையாகும். இந்த உண்மையை மறைப்பதற்கும், மழுப்புவதற்கும் தனிநாடு கேட்டுவரும் தமிழர் கூட்டணித் தலைமை எவ்வளவோ முயன்றபோதிலும் அதனால் முடியவில்லை. அவர்களது ஏமாற்று முயற்சிகள் எவ்வளவு பிரசாரப்படுத்தப்பட்டபோதிலும் சாதியின் கொடுமைகள் தொடரவே செய்கின்றன.

1966 ஆம் ஆண்டு அக்டோபர் 21 இன் எழுச்சியைத் தொடர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உறுதியான போராட்டங்கள் சாதிஅமைப்புக்கும் தீண்டாமைக்கும் பலத்த அடியைக் கொடுத்த போதிலும் முற்றுமுழுதாக அதன் அடித்தளத்தை தகர்க்கவில்லை. இப்போராட்டங்களினாலும், அதில் கிடைத்த வெற்றி தோல்விகளினாலும் ஒடுக்கப்பட்ட மக்கள் இரண்டு அனுபவ ரீதியான உண்மைகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. ஒன்று, சாதி தீண்டாமைக்கெதிரான போராட்டம் அரசியல் மயப்படுத்தப்பட்ட வர்க்கப் போராட்டத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட வேண்டியது என்பதும், இரண்டாவது, சாதி - தீண்டாமையின் தோற்றுவாய் தமிழ் ஆண்ட பரம்பரையினரிடமிருந்துதான் புறப்படுகின்றது என்பதுமாகும்.

இந்த ஆண்ட பரம்பரையினர் வேறு யாரும் அல்லர்; இன்று தமிழர் கூட்டணியினரால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் மேல்மட்ட வர்க்கத்தினர்தான் என்பது புரிந்துகொள்ளப்படல்

(7-ம் பக்கம் பார்க்க)

# மாதச் சம்பளம் ஒரு ஏமாற்று வித்தையா?


இந்நாட்டின் தேசிய வருமானத்தில் சுமார் முக்கால் பங்கினைப் பெற்றுத் தருவது மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பே. ஆனல் அவர்களுக்கு இன்னும் பிழைப்பு மட்ட வாழ்க்கையை உயர்த்தக்கூடிய ஒரு சம்பளம் கிடைக்காமலிருப்பது ஏமாற்றத்தின் உச்சக்கட்டம் என்று கூட சொல்லிவிடலாம்.

மாதச் சம்பளம் - ஆண் பெண் சமசம்பளம் என்பன இன்று மலையக மக்களின் அதி முக்கிய தேவைகளுள் ஒன்ருகியுள்ளது. நிமிடங்களுக்கு நிமிடம் உயருகின்ற விலையேற்றத்தின் பாதிப்புக்களுக்கு இம்மக்கள் மாத்திரம் விதிவிலக்காக முடியாத வேலை சம்பளத்தில் மாத்திரம் ஏன் இந்த பாரபட்சம். மலையகத் தோட்டங்களில் உழைப்பில் எவ்வித ஏற்றத்தாழ்வில்லாது ஆண்களுக்குச் சரிநிகராக உழைக்கின்ற பெண்களுக்கென்று ஆண்களைவிட குறைவான நாட்கூலியை இல்லாமல் செய்து ஆண்பெண் இருபாலாருக்கும் சமமான நியாயமான சம்பளத்தை உடன் வழங்க வேண்டும்.

மாதச்சம்பளம் பெற்று தருவேன் என்று மார்தட்டியவர்களெல்லாம் "பாராளுமன்றம்" சென்றதும் மறந்தபாடமாகி விட்டனர். இது ஒருபுறமிருக்க "தோட்டத் தொழிலாளர்களும் அரச ஊழியரே" என்று உச்சரித்தவர்கள் அண்மையில் அரச ஊழியர்களுக்கு மாத்திரம் 70ரூபா சம்பள உயர்வினை ஏற்படுத்தி இருப்பதும் இது பற்றி மார்தட்டியவர்கள் மௌனியாக இருப்பதும் கவனிக்க வேண்டியதொன்ருகும்.

அத்துடன் சகலருக்கும் முன்பு 55 ரூபா சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. ஆனல் தோட்டத் தொழிலாளருக்கு 'இவ்வுயர்வு கிடைக்க 22 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டியது ஒரு விதிமுறை" எந்த தோட்டத் துறையாவது 22 நாள் வேலை வழங்க முயற்சிப்பதில்லை. 19, 20 நாட்களிலேயே நிறுத்திவிடுவதன் மூலம் 55 சம்பளவுயர்வினைத் தடுத்துவிடுகின்றனர். இந்நிலைமையை மலையக மக்கள் உணரவேண்டும்.

எனவே மலையக மக்கள் மாதச்சம்பளத்தை மறந்துவிடவில்லை. அண்மையில் கூடவிருக்கின்ற சம்பள நிர்ணய சபை இதுபற்றி ஒரு தீர்க்கமான முடிவை வெளியிடட்டும். புததாண்டில் பொலிவிழந்த மலையகம் திடீரென உயரும் விலையேற்றங்களுக்கு சிறிதளவாவது ஈடுகொடுக்கம் வாய்ப்பை யாவது பெறட்டும். ★




# மலையகத்தில் அபிவிருத்தியடையும் கருத்தடை

கருத்தடை என்ற அம்சம் இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ என்னவோ மலையகத் தோட்ட மக்களிடம் பரந்த அளவில் இச்சிகிச்சை நடைபெறுவது மறுக்க முடியாத ஒரு உண்மையாகும்.

இக் கருத்தடையானது. ஏற்கனவே வசதியற்றிருக்கும் மருந்து கொடுப்பதற்கு மாத்திரமாக அமைக்கப்பட்ட தோட்ட மருந்தகங்களில லேயே நடைபெறுகின்றது. அந்தளவுக்கு இலங்கை முன்னேறிவிட்டதென நினைத்துவிடாதீர்கள். கேவலம்! ஓரிரவிலேயே இருநூறு முந்நூறு தோட்டத் தொழிலாளர்கள் இச்சிகிச்சை செய்விக்கப்படுகின்றனர். எனவே இச்சிகிச்சையில் ஏற்படுகிற எவ்விதமான பாதகமான விளைவுகளுக்கும் எவ்வித உத்தரவாதமுமில்லை.

அன்ருடம் பொருட்கள் வாங்கவே பணம் தேடுகின்ற 'பணப்பைகள்' தூசுதட்டுகின்ற மாதத்தின் இறுதி நாட்களில்' நடைபெறும இக் கருத்தடை வெற்றிகரமாவதற்கும் நியாயமுண்டு. பணத் தட்டுப்பாடான நேரத்தில் 500 ரூபா இலவசமாகக் கிடைப்பதும் அதுவரை அத்தொகையை ரொக்கமாகக் காணுகின்ற, வாய்ப்பில்லாத தோட்டமக்கள் உடன்பட்டு விடுகின்றனர். 'கடன்' என்பதன் பொருத்தமான வரைவிலக்கணத்தை நாம் மலையகமக்களின் வாழ்க்கையிலே கண்டுகொள்ள முடியும். இவ்வாருன கடன்களினல் விரக்தியடைந்த இளைஞர் பலர் தற்கொலையை நாடுவதும் இன்றேல் கருத்தடை செய்து தனது எதிர்காலத்தைத் தற்கொலை செய்து கொள்ளவும் தலைப்பட்டது நாட்டின் தற்போதைய 'அபிவிருத்தி'யில் இதுவும் ஒரு அம்சமாக இடம்பெறுகின்றதாகும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## செய்திக் கடிதம்

மதிப்புக்குரிய செம்பதாகைக்கு!

நான் ஒரு தோட்டக் கமிட்டித் தலைவராக 1950ம் ஆண்டு இருந்தபோது மூகங்கொடுத்த பிரச்சினைகள்:-

- மாதச்சம்பளம் வேண்டும்
- பிரசாவுரிமை வேண்டும்
- வைத்திய - சுகாதார பிரச்சினைகள்
- கல்வி வசதிவேண்டும்
- வசிப்பிட நிலைமைகளை சீர்படுத்தவேண்டும்

எனது பேரன் ராமசாமி ஒரு தோட்டக்கமிட்டி தலைவராக இன்று முகங்கொடுக்கும் பிரச்சினைகள்:-

- மாதச்சம்பளம் வேண்டும்
- பிரசாவுரிமை வேண்டும்
- வைத்திய - சுகாதார பிரச்சனைகள்
- கல்வி வசதிவேண்டும்
- வசிப்பிட நிலைமைகளை சீர்ப்படுத்தவேண்டும்

### தொண்டமானும் ? தொழிற்சங்கமும் ?

தலவாக்கெல்லை.
5-1-1981.

இப்படிக்கு
முனியாண்டி

# 'நட்சா'வின் நயவஞ்சகம்

திட்டமிடாமல்-தோல்வியடைந்து—புறமுதுகுகாட்டியோடுகின்ற — நிலையற்ற பொருளாதாரக் கொள்கைகளினல் இலங்கை அபிவிருத்தி அடையப் போவதில்லை. எனினும் பாவம், சில நல்ல திட்டங்களையும் நச்சுப்படுத்துகின்றனரே என்றளவில் நாம் சும்மா இருந்துவிட முடியாதே.

மலையகத் தோட்டப் புறங்களில் 'நட்சா' எனும் குறைந்தபட்சமாவது நூற்போக்குடைய திட்டத்தை-நன்றிகெட்டதனமாகச் செயற்படுத்தி நச்சுப்படுத்தி நாடற்றவர்கள் எனக் கூறப்படும் தோட்டத் தொழிலாளர்களை நடுரோட்டில் அலைய வைத்திருப்பதில் இலங்கை அரசிற்கு அலாதிப் பிரியமாக இருக்கின்றதே.

தேயிலை, றப்பர் போன்ற பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்கள் எதிர்காலத்தில் ஸ்திரமற்ற — மந்தப் பொருளாதாரப் போக்குகளை விளைவிக்கும் என்பதாலும் அதைத் தடுக்க 'மீளவளமாக்கல்' என்ற அடிப்படையில் பாரம்பரியமற்ற பொருட்களை உற்பத்திசெய்வது என்ற எண்ணம் வரவேற்கக் கூடியதே. இத்திட்டம் தோட்ட அமைப்பை - கிராமங்களாக மாற்றும் என்பதிலும் தவறில்லையே.

ஆனல் காலாகாலமாக தோட்டத்தில் வாழும் மக்களை நடுவீதியில் விட்டுவிட்டு வெளியிடத்திலிருந்து மக்களை (நாட்டுப்புற சிங்கள மக்களை) கொண்டுவந்து குடியேற்றங்களைத் திணிப்பது என்பதில் சிறிதளவு கூட மனிதாபிமானம் இல்லையே.

இது 'அபிவிருத்திக்கு' உதவாது மாருக இலங்கை வாழ் தேசிய இனங்களிடையே பிளவை அதிகரிக்கும் முரண்பாடுகளை கூர்மைப்படுத்தும் - திட்டமிட்ட நாசகாரவேலை என்பதில் சிறிது கூட சந்தேகம் இல்லையே.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நீண்ட பாரம்பரிய மூடைய தோட்டத் தொழிலாளர்களை-துன்புறுத்துகிற வாழ்க்கையை, ஸ்திரமற்றதாக்குகின்ற நடைமுறைகளால் இலங்கை அரசின் நன்றிகெட்ட, நாசகார ஒடுக்குகின்ற ஒரு திட்டமாகவே 'நாட்சா' விளங்குகின்றது.

"'நட்சா' ஒரு நல்ல திட்டம்" என நாடுபூராவும் சத்தமிட்டாலும் தோட்டப்புறங்களில் இதன் உச்சரிப்பே குலைநடுங்க வைக்கும் எச்சரிக்கையாக இருக்கின்றது.

இத்திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கும், காணிமுதல் சகல வசதிகளும் செய்துகொடுத்து அவர்களுக்கு முன்னுரிமைகொடுத்துப் பங்களிக்காமல் இருப்பதற்குக் காரணம் தோட்ட மக்களுக்கு ஓட்டுரிமையே கொடுக்கின்ரேமே அன்றி நாட்டுரிமை இல்லையே" என கூறித் தப்பித்து விடலாம் என்று தார்மீக அரசின் இனவாத அமைச்சர்கள் நினைப்பது மடமையே.

'நட்சா' என்று கூறி அப்பாவி மக்களைத் துரத்தி அடிக்கின்ற நிலைமையை — மலையகமக்கள் அங்கீகரிக்கின்ருர்கள் என்று, நினைக்காது இத்தகைய கொடூரச் செயலை உடன் கைவிடப் படவேண்டும்.

"சகல மக்களுக்கும் நாட்டின் அபிவிருத்தியில் பங்கு உண்டு" என்று அடிக்கடி உச்சரிப்பவர்கள் 'நட்சா'வில் மறந்துவிடுவது புத்தியன்று.

எனவே 'நட்சா' எனும் திட்டத்தின் நன்றி கெட்ட நாசகாரச்' செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்ரேம். தோட்டத் தொழிலாளர்களைத் துன்புறுத்தும் 'நட்சா' நடைமுறைகளைக் கைவிடல் வேண்டும் எனக் கோருகின்ரேம்.

# சோஷலிச நிர்மாணத்தில் அந்நிய மூலதனமும் - தொழில்நுட்பமும்

## சீனாவின் நவீன்மயத்திட்டம் மாக்சிச - லெனினிச வரம்பிற்குட்பட்டது

— ஸ்ரீதரன் —

சீனாவின் பொருளாதாரத் துறையானது கட்சியினதும் அரசினதும் முடிவுகளுக்கு அமைய மறுசீரமைப்புக்கு உள்ளாகியுள்ளது. நான்கு துறைகளினாலான நவீன மயப்படுத்தும் கொள்கையின் மூலம் இந்த நூற்றாண்டின் முடிவில் சீன தேசத்தைச் சக்திமிக்க நவீன சோஷலிச நாடாக உலகின் முன் கொண்டுவருவது என்ற அடிப்படையிலேயே இப்பொருளாதார சீரமைப்பு இடம்பெற்று வருகின்றது. இது முற்றிலும் சோஷலிச விதிமுறைகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டதாகவும், மாக்சிச அடிப்படைகளைக் கொண்டதாகவுமே இருக்கின்றது.

சீனாவின் பொருளாதார மறுசீரமைப்பிற்கான நடவடிக்கைகளைத் தவறாகவும் திட்டமிட்டும் சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். சோஷலிச அமைப்புப் பற்றிய இவ்வரட்டு வேதாந்திகள் எப்பொழுதும் கற்பனை உலகிலும் தமது மானசீக முடிவுகளிலும்தான் தங்கியிருப்பார்களே ஒழிய யதார்த்தமான நிகழ்கால நிதர்சன வாழ்வுக்கு ஒருபோதும் இறங்கி வரமாட்டார்கள். எனவே சோஷலிசத்தின் கீழ் நடைமுறைக்குச் சாத்தியமான சில விடயங்கள் இந்த வரட்டுவாதிகளால் பிழையாகப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதால் சரியான விடயங்களை முன் வைப்பது அவசியமாகின்றது.

ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியபின் அதாவது சோஷலிச நிர்மாண காலகட்டத்தில் முதலாளித்துவ நாடுகளின் தொழில்நுட்பத்தையும் மூலதனத்தையும் பயன்படுத்தி தனது சோஷலிச பொருளாதார நிர்மாணத்தை விரைவுபடுத்தலாமா என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது. இக்கேள்விக்கு தோழர் லெனின் அவர்கள் 'ஆம்' என்றே பதிலளித்தார்.

தோழர் லெனின் 1920 இல் தனது ''பாட்டாளி வர்க்கலாச்சாரம்'' என்ற பிரசுரத்தில் 'மாக்சிசம் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் தத்துவம் என்ற சரித்திர முக்கியத்துவத்தைப் பெற்ற காரணம் என்னவெனில் அது முதலாளித்துவ சகாப்தத்தின் மிகவும் பெறுமதிவாய்ந்த சாதனைகளை ஒதுக்கித் தள்ளிவிடுவதற்குப் பதிலாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட மனித சிந்தனை கலாச்சாரம் என்பவற்றின் வளர்ச்சியின்போது பெறப்பட்ட பெறுமதியுள்ள அனைத்தையும் கிரகித்து, மறுவடிவம் கொடுத்ததேயாகும் என்றார்.

மேலும் 1920 இல் அவர் நீர்விநியோகத் தொழிலாளர்களின் அனைத்து ரஷ்ய மூன்றாவது மகாநாட்டிற்கு ஆற்றிய உரையின்போது, ''பாட்டாளிவர்க்கம் தனது அதிகாரத்தை பலாத்காரத்தினால் நிர்ப்பந்தத்தினால் மட்டும் நிலைநிறுத்த முடியாது. கலாச்சார ரீதியில் தொழில் நுட்பரீதியில் முதலாளித்துவம் பெற்றுக்கொண்ட முன்னேற்றகரமான முழு அனுபவத்தையும் பயன்படுத்துவதோடு, இந்த மக்கள் அனைவரினதும் சேவையைப் பெற்றுக்கொள்வதன்மூலமாக மட்டுமே அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள முடியும்'' என்றும் கூறினார்.

1918 இல் தோழர் லெனின் ''சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்'' என்ற நூலில் வளர்ச்சியடைந்த விஞ்ஞானம், தொழில்நுட்ப உற்பத்தி, முகாமைத்துவ அனுபவம், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் கலாச்சார சாதனைகள் என்பவற்றைப் பயன்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை எடுத்துக் கூறியிருந்தார்.

மேலும் அவர் ''சோஷலிசத்தைக் கட்டியமைக்கும் சாத்தியம் சோவியத் அதிகாரம், சோவியத் நிர்வாக அமைப்பு என்பவற்றோடு முதலாளித்துவத்தின் மிக அண்மைக்காலச் சாதனைகளுடன் ஒன்றிணைப்பதிலேயே தங்கியுள்ளது' எனவும் தெரிவித்திருந்தார். முன்பு தனது கட்டுரைக்கு தயார்செய்து கொண்டிருக்கும்போது லெனின் அவர்கள் ஒரு சூத்திரத்தைத் தயாரித்தார். அது பின்வருமாறு இருந்தது:-

'சோவியத் அரசாங்கம் + சீரான பிரஷ்யப் புகையிரத சேவை + அமெரிக்க தொழில் நுட்பமும் — ரஸ்ட்டுக்களும் + ஐ அமெரிக்காவின் தேசிய கல்வி முதலான என்பவற்றின் மொத்தக் கூட்டுத்தொகை = சோஷலிசம்.' என்பதாகும்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து இயந்திரங்கள், தொழில்நுட்ப உதவி என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளாமல் சின்னாபின்னப்பட்டுப் பின் தங்கியிருந்த நாட்டின் பொருளாதாரத்தை சொந்த முயற்சியில் மட்டும் தங்கியிருந்து புனரமைத்துவிட முடியாதெனப் போல்ஷ்விக் கட்சியின் பத்தாவது மாநாட்டின்போது தெரிவித்திருந்தார்.

1930 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சோவியத் யூனியன் இயந்திரங்களை வாங்குவதில் உலகில் முதலாவது ஸ்தானத்தைப் பெற்றிருந்தது. அப்போது முதலாளித்துவநாடுகள் ஏற்றுமதிசெய்த மொத்த இயந்திரங்களில் மூன்றில் ஒன்றிலிருந்து அரைவாசியை சோவியத்யூனியன் பெற்றது. 1920 இலிருந்து இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பிப்பதற்குச் சற்று முந்திய காலம்வரை சோவியத் யூனியனுக்கு 200 கோடி ரூபிள்கள் அன்னியக் கடனாகக் கிடைத்தது. 1923இன் முடிவில் அன்னிய மூலதனத்துடன் சோவியத் யூனியனில் 24 கூட்டுக் கம்பனிகள் இயங்கின.

இன்று மக்கள் சீனம் என்ன அடிப்படையில் அன்னிய நிதியையும், தொழில் நுட்பத்தையும் பெற்றுக் கொள்கின்றது என்பதை கவனிப்போம்.

அன்னியக் கடனை திருப்பச் செலுத்தக்கூடிய நிலையிலிருந்தால் மட்டுமே அந்த உதவி பெறப்படுகின்றது. சர்வதேச நடைமுறையின்படி வருடாவருடம் கடனின் ஒரு பகுதியையும் வட்டியையும் திரும்பச் செலுத்துதல் வேண்டும். குறிப்பிட்ட வருடத்தில் பெறற அன்னியச் செலாவணிச் சம்பாத்தியத்தின் இருபதுவீதத்தை அதிகரிக்காதபடி திரும்பச்செலுத்தும் கடனின் பகுதியும், வட்டியும் இருத்தல் வேண்டும். ஆகக்கூடியது 25 வீதத்தை அதிகரிக்கக் கூடாது.

முதலும் வட்டியுமாகத் திருப்பிச் செலுத்தப் போதிய அன்னியச் செலாவணி இருக்கிறதா அல்லது இல்லையா என்பது மூன்று நிபந்தனைகளைப் பொறுத்திருக்கும்.

1) உற்பத்தி செய்யப்பட்ட அந்தப் பொருள் சர்வதேச சந்தையில் போட்டி போடக் கூடியதாயிருத்தல் வேண்டும்.

2) குறிப்பிட்ட பொருளை ஏற்றுமதி செய்ய முடியாவிட்டால் இறக்குமதி செய்யும் அதேமாதிரிப் பொருளுக்கு மாற்றுப்பொருளாக அமைய வேண்டும். இதன் மூலம் இறக்குமதிக்காகச் செலவழிக்கவேண்டிய அந்நியச் செலாவணியை மீதப்படுத்தி அதை பெறப்பட்ட கடனின் ஒரு பகுதியையும் வட்டியையும் கொடுக்க உபயோகிக்கலாம்.

3) குறிப்பிட்ட திட்டத்தில் பெறப்படும் இலாப வீதம் கடனுக்குப் பெறப்பட்ட பணத்திற்கு கொடுக்கும் வட்டிவீதத்திலும் பார்க்க கூடுதலாக இருத்தல் வேண்டும்.

ஒரு முழுமையான தொழிற்கூடத்தையே இறக்குமதி செய்தால் அதற்கான உபஉறுப்புக்கள் வேறு அதனோடு ஒத்த உபகரணங்களை சீனாவிலேயே உற்பத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 1970ம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட முழுத் தொகுதிப் பாரிய கூடங்களுக்கு வேண்டிய உதிரிபாகங்கள் ஏனையன என்பவற்றிற்கு ஒன்றிற்கு நான்கு என்ற வீதத்தில் முதலீடு செய்யப்படுகின்றது. அதாவது இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்திற்காகச் செலவு செய்யப்பட்ட ஒவ்வொரு அமெரிக்க டொலருக்கு உள்நாட்டில் நான்கு யுவான் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ரீதியில் உபஉறுப்புக்களுக்கான உற்பத்தியில் முதலீடு செய்யாவிட்டால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களால் பிரயோசனம் இருக்காதென சீன நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மேலும் எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் தொழிற்நுட்பம், மூலதனம் என்பது தற்போதுள்ள தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கும் அவற்றிலிருந்து ஆகக் கூடுதலான பலனைப் பெறுவதற்கு உபயோகப்படுத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முழுமையான தொழிற்கூடங்களை இறக்குமதி செய்வது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தொழில்நுட்பம் சீனாவின் தொழில்நுட்ப வியலாளரின் தரத்திற்குச் சற்றுக் கூடியதாகவே இருக்கும். இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை இயக்கவும், பழுதுபார்க்கவும் கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இறக்குமதி அனுமதிக்கப்படுகிறது. மேலும் மேற்கு நாடுகளில் செலவு அதிகம் என்பதால் உயர்ந்த தன்னியக்க சக்திகளுக்குமுக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. ஆனால் சீனாவில் பல இலட்சக் கணக்கானவர்களுக்குத் தொழில் வாய்ப்பு செய்ய வேண்டியுள்ளதால் கண்மூடித்தனமாக உயர்ந்த தொழில்நுட்பம் இறக்குமதி செய்யப்படவில்லை. குறைந்தமூலதனத்துடன் கூடிய எண்ணிக்கையினருக்கு தொழில் வாய்ப்பு வழங்கக்கூடிய வகையிலேயே அந்நியதொழில் நுட்பம் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இன்று மேற்கத்திய வளர்ச்சியடைந்த தொழில் நுட்பத்துடன் சீனத் தொழில் நுட்பத்தை ஒப்பிட்டால் சீனாவில் தொழில்நுட்பம் பின்தங்கியே காணப்படுகின்றது. எனவே வளர்ச்சி அடைந்ததொழில் நுட்பத்தை மேற்கத்திய நாடுகளிலிருந்து பெற்று அதை முற்றிலும் சீனப்பாணியிலான தொழில் நுட்பமாக மாற்றுவதும் அதிலிருந்து புதிய வளர்ச்சிகளை உருவாக்குவதும் சீனாவின் நோக்கமாகும். இது மாக்சிச — லெனினிச — மாசேதுங் சிந்தனை வழி காட்டும் சோஷலிச பொருளாதாரக் கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவே செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

---

## மலையகத்தில்

5-ம் பக்கத்தொடர்...........

கருத்தடை செய்து மக்களைக்கட்டுப்படுத்துமளவுக்கு இலங்கை பொருளாதாரத்தில் முன்னேறிவிடவில்லை; இலங்கையின்வளங்கள் பயன்படுத்தப்படவுமில்லை. சுருங்கக்கூறின் இலங்கையின் இன்றைய காலகட்டத்தில் கருத்தடை அவசியமுமில்லை. குறிப்பாகச் சில தோட்ட வைத்தியர்களுக்கு சம்பளத்துடன் ''கிம்பளமும்'' கிடைப்பதினால் அவர்கள் இரவு பகலாகக் கருத்தடைக்கு ஆள் பிடிக்கும் வேட்டையில் ஈடுபட்டுள்ளதும் இதனால் அன்றாட மருந்துச்சாலை ஸ்தம்பிதமடைந்திருப்பதும் கவனத்திற்குரியஒன்றாகும். மனம் விரும்பிச் செய்தது கொள்ள வேண்டிய இச்சிகிச்சையை ஓரிரண்டு குழந்தையுள்ளோருக்கு ஐந்நூறு ரூபாவும், குழந்தையில்லாதோருக்கு ரூ. 1500/ வழங்குவதன் மூலம் மலையக மக்களின் பலவீனத்தை பயன்படுத்தி இச்சிகிச்சை மேற்கொள்ளப்படுவது கண்டனத்திற்குரியதொன்றாகும்.

சீனாபோன்ற நாடுகளில் கருத்தடை என்பது பெருந்தேசிய இனங்களிடையே மட்டும் மேற்கொள்ளப் படுகின்றது. ஏனெனில் அபிவிருத்தியடையாத ஏனைய சிறுபான்மை இனங்களின் வளர்ச்சிக்கு வித்திடுவதாம். ஆனால் இலங்கையில் அபிவிருத்தியடைந்த இனம் எதுவுமே இல்லை. இந்நிலையின் தோட்ட மக்களிடையே பரந்தளவில் கருத்தடை செய்வதோடு கருத்தடையின் விலைகளை அபிவிருத்தி செய்வதாகவும் கூறுகின்றனர். உண்மைதான்! பிழைப்பு மட்டத்திலேயே வாழ்ந்து கொண்டு இருக்கும் மலையக மக்களுக்கு அபிவிருத்தி 'இலங்கையின் அதி 'உன்னத கொடை' கருத்தடையாகத்தானிருக்க முடியும்.

இவ்வாறு திட்டமிட்டு ஓரினத்தின் எழுச்சியை மறைமுகமாக பணத்தைக் காட்டி பலவீனத்தைப் பயன்படுத்தி அடக்க முயற்சி செய்கின்ற இத்தன்மையானது 'தார்மீக அரசின்' மேன்மை தாங்கிய நோக்கங்களின் ஒன்றாகவும் இருக்கலாம். இந்த திட்டமிட்ட அடக்கல் முயற்சியின் மூலம் எதிர்காலத்தில் எழப்போகும் ஒரு வர்க்கப் போராட்டத்தைப் பின்போட எத்தனிக்கின்ற அரசுக்கு சகல மலையக மக்களின் நலன் பேணுகின்ற இயக்கங்களும் ஒரு கண்டனக்குரலை உயர்த்திக் காட்டவேண்டியது மிக மிக அவசியமானதொன்றாகும்

# கம்பூச்சிய படைகளின் முன்னேற்றம்!

சிறு அளவில் ஆரம்பித்த கம்பூச்சிய எதிர்ப்பு இயக்கம் இப்பொழுது தேசமளாவிய போராட்டமாக மலர்ந்துவருகின்றது. தாய்லாந்தின் எல்லைப்புறத்தில் உள்ள சிறுகும்பல்கள் என வியத்நாமியர்களால் வருணிக்கப்பட்ட கம்பூச்சிய கொரில்லாப்படைகள் இன்று தேசிய இராணுவமாக வளர்ந்து நாட்டுப்புறங்களில் மட்டும் அன்றி நகரங்களிலும் வியத்நாமியர்களை தாக்கும் அளவிற்குச் சக்திபெற்றுவிட்டது. சாதாரண வியத்நாமிய போர்வீரர்கள் மாத்திரமன்றி உயர் அதிகாரிகளே கொல்லப்படும் நிலைக்கு இப்பொழுது தாக்குதல்கள் நடைபெறுகின்றன. சென்றமாதத்தில் கொரில்லாக்கள் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர் என்று கம்பூச்சிய வானொலி அறிவித்தது.

அண்மையில் புருசத் நகரிலுள்ள புகையிரத நிலையத்தை தேசபக்த படைகள் தாக்கிப் பெரும் சேதத்தை உண்டாக்கி இருக்கின்றன. புகையிரதநிலையத்தை ஆதாரமாய்க்கொண்டு வியத்நாமியர் கட்டி வைத்திருந்த பாதுகாப்பு நிலையம் தகர்த்து எறியப்பட்டது. கம்பூச்சியப் படைகளைப் பின்தொடரமுற்பட்ட வியத்நாமியர் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடி குண்டுகளுக்கு இரையாகினர். இப்படி பல இடங்களில் வியத்நாமியர் தேசபக்தப் படைகளிடம் தோல்விகண்டு வருகின்றனர். புருசத் மாகாணத்தின் பிறிதொரு பகுதியிலே ஜனவரி இறுதியில் வியத்நாமிய இராணுவத்தை ஏற்றிச்சென்ற பல லொறிகள் தாக்கப்பட்டன. சுமார் ஐம்பது வியத்நாமியர் உயிர் இழந்தனர். ஏராளமான இராணுவ உபகரணங்கள் கம்பூச்சியர்களால் கைப்பற்றப்பட்டன. ஜனவரி மாதம் வியத்நாமியர் கம்பூச்சியாவை ஆக்கிரமித்த இரண்டாவது வருட நிறைவாகும். அதைக் குறிக்கும் முகமாகவே கம்பூச்சிய விடுதலைப் படைகள் நாடு முழுவதும் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டனர்.

★

இலத்தீன் அமெரிக்கா அல்லது தென்னமெரிக்கா என்று பொதுவாக அழைக்கப்படும் பிராந்தியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடுமையை பலகாலமாக அனுபவித்து வந்துள்ளது. தென் அமெரிக்காவின் மூலப் பொருட்களைச் சூறையாடி, உற்பத்திப் பொருட்களுக்கு ஏற்ற சந்தையாக அமெரிக்க ஏகாதிபத்தியம் அந்தப் பிராந்தியத்தை வைத்திருக்கின்றது. இராணுவ ஆட்சிகளை உருவாக்கி அவற்றைக் கைப்பொம்மைகளாக ஆட்டிப்படைத்து வந்துள்ளது. ஆயினும் உலகளாவிய புரட்சிகர இயக்கங்களின் எதிரொலியும் தாக்கமும், இலத்தீன் அமெரிக்காவிலும் படரத்தான் செய்தன. தேசபக்தியும் சோஷலிச உணர்வும் நிரம்பப் பெற்ற இலட்சக்கணக்கா

## தென் அமெரிக்க நாடுகளில் போராட்டச் சுவாலை

ஞேர் இப்பொழுது தென் அமெரிக்க நாடுகள் பலவற்றிலே ஆயுதந்தாங்கிய போராட்டத்திலே ஈடுபட்டு வருகின்றனர். சில காலத்துக்கு முன் நிக்கரகுவா கொடுங்கோல் ஆட்சியிலிருந்து தன்னையும் விடுவித்துக் கொண்டது. தேசபக்த படைகள் அங்கு சர்வாதிகாரி மோஸாவை விரட்டியடித்துவிட்டு மக்கள் ஆட்சியை ஏற்படுத்தியுள்ளனர். இப்பொழுது நிக்கரகுவாவின் அண்டை நாடான எல்சல்வடோரில் தேசபக்த சக்திகளுக்கும் இராணுவத்துக்கும் மோதல் மூண்டுள்ளது. அந்த நாட்டின் முக்கிய நகரங்களுக்கு அண்மையில் உக்கிரமான சண்டைகள் நடந்திருக்கின்றன. வெளிநாட்டுத் தலையீடுகளும் இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வருடகாலத்துக்கும் மேலாக மத்திய அமெரிக்க நாடாகிய எல்சல்வடோரில் பலாத்காரம் தலைவிரித்தாடி வந்திருக்கின்றது. அரசியல் கட்சிகளுக்குள் மோதல்கள் மட்டும் அன்றி, வலதுசாரி இராணுவத்துக்கும் கெரில்லாப் படைகளுக்கு இடையிலும் மோதல்கள் நடந்துள்ளன. 1979 ஆம் வருடம் சர்வாதிகாரி தளபதி ரொமெரோவைக் கவிழ்த்த இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவரப்போவதாக வாக்களித்தது. ஆயினும் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை; மாறாக மக்களுக்கு மேலும் பொருளாதாரச் சுமைகள் உண்டாகின. எல்சல்வடோர் நிலப்பிரபுக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ள ஒரு நாடாகும். அவர்களின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இராணுவம் இருக்கிறது. இராணுவமே அரசியல் படுகொலையைத் திட்டமிட்டு நடாத்தி வருகின்றது. இடதுசாரி சக்திகளையும் தேசபக்த சக்திகளையும் அடக்கி அழிப்பதையே குறிக்கோளாக கொண்டு இராணுவம் இயங்கிவருகின்றது. எல்சல்வடோரிலுள்ள சர்வதேச மனித உரிமைகள் குழுவின் அறிக்கையின்படி 1979 ஒக்டோபரிலிருந்து 1980 டிசம்பர் வரையுள்ள காலப் பகுதியில் மாத்திரம் பதினாலாயிரம்பேர் அரசியல் காரணங்களுக்காகக் கொல்லப்பட்டிருக்கின்றனர். எல்சல்வடோர் திருச்சபை கூட இப்படுகொலைகளுக்கு இராணுவமே காரணம் என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றது.

அடக்குமுறையும் அட்டூழியமும் அதிகரிக்க அதிகரிக்க மக்களின் எதிர்ப்புணர்வும் புரட்சிகர எழுச்சியும் அதிகரித்து வந்துள்ளன. இது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். அண்மையில் ஐந்து புரட்சிகரக் குழுக்கள் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. முதல் வாரத்திற்குள்ளேயே எண்ணூறு போர்வீரர்களும் அவர்களின் அதிகாரிகளும் அரசாங்கத் தரப்பிலிருந்து எதிர்தரப்புக்கு மாறிவிட்டனர். மக்களின் எழுச்சியின் ஆழத்தையே இது காட்டுகிறது. அமெரிக்க அரசாங்கம் சர்வாதிகார இராணுவ ஆட்சியையே ஆதரிக்கிறது மேலும் மேலும் இராணுவ தளபாடங்களையும் வழங்கியிருக்கிறது. எனினும் எல்சல்வடோர் பழைய நிலைக்குத் திரும்ப இயலாது விரைவில் புரட்சிகரப்படைகளின் கை ஓங்கும் என்பதில் ஐயமில்லை.

★

# உலக அரங்கில்

அங்கும் இங்கும்

## சோவியத் மயமாக்கும் இந்திரா

உலக அரங்கிலே இந்தியா, சோவியத் யூனியனின் ஊதுகுழலாக செயற்படுவதை உலகம் அறிந்துள்ளது. சர்வதேச மாநாடுகளில் ஏனைய மூன்றாவது உலக நாடுகளின் நிலைப்பாட்டிலிருந்து இந்திய நிலைப்பாடு வேறுபடுவதும் சோவியத் செல்வாக்கினாலேயாகும். இதற்கு அடிப்படை பொருளாதாரப் பிடியே என்பது பலருமறிந்ததே. அத்துடன் இராணுவத்துறையில் சோவியத்யூனியனே இப்பொழுது முதலாம் நம்பர் சப்ளையராக விளங்குகிறது: அண்மையில் இந்திய விமானப் படை சோவியத்யூனியனிலிருந்து முதலாவது தொகுதி மிக் - 23 விமானங்களைப் பெற்றுள்ளது. அவற்றுடன் ரஷ்யாவில் பயிற்சி பெற்ற விமானிகளும் திரும்பியுள்ளனர். பலகோடி பெறுமதியான மிக்-23 விமானங்களை இந்தியா அடுத்த சில வருடங்களுக்குள் பெற்றுக்கொள்வதற்கு உடன்பாடாகியுள்ளது. பிறநாடுகளிலுள்ள தளங்களைத் தாக்கவல்ல இவ் விமானங்கள் ரஷ்யர்களின் ஆலோசனைப்படி பெறப்பட்டன. இந்திய விமானப் படை இப்பொழுது முற்றுமுழுதாக ரஷ்ய விமானங்களைக் கொண்டதாகவே அமைந்துள்ளது. இத்தகைய கழுத்துப் பிடிகளினாலேயே இந்தியாவின் குரல் உலக அரங்கில் ரஷ்யாவின் எதிரொலியாக இருப்பதை பலரும் அவதானித்துள்ளனர். நடுநிலைமைபற்றி திருமதி இந்திராகாந்தி எவ்வளவுதான் உரக்கக் கூறினாலும், இந்தியா ரஷ்யா பக்கம்சார்ந்திருப்பதை மூன்றாவது மண்டல நாடுகள் நாளுக்கு நாள் உணர்ந்து வருகின்றன.

★

## வியட்னாம் ஆளும் கும்பலுக்குள் குத்துவெட்டு!

கம்பூச்சியாவிலே வியத்நாமிய ஆக்கிரமிப்புப் படைகள் அடிக்குமேல் அடிவாங்கி கொண்டிருக்கும் வேளையில், அதிகம் பிரச்சாரம் அற்ற முறையில், வியத்நாமிலே அரசாங்கத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. நிலைமை மோசமடையும்போது 'இலரின் தலையில் பழியைப்போடுவதுபோல' வியத்நாமிய அரசியல் தலைமை சில அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பதவிநீக்கம் செய்திருக்கிறது. ஐந்து அமைச்சர்கட்கு பதவி நீக்கம், ஒன்பது அமைச்சர்களில் அதிகாரிகள் மாற்றம். ஒரு வருட காலத்தினுள் இது இரண்டாவது பெரிய மாற்றமாகும், குறிப்பாக உணவு உற்பத்தி, கடல்வளம் நீர்வளம் முதலியன சம்பந்தமான அமைச்சுக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

பெருவாரியான படைகள் கம்பூச்சியாவிலே நிலைகொண்டிருப்பதால் உணவுற்பத்தி முதலியன பாதிக்கப்பட்டுள்ளன. அதிகரித்த செலவினம் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. ரஷ்யாவின் தூண்டுதலினாலும், தென் கிழக்காசியாவில் தலைமை வகிக்கவேண்டும் என்ற தவறான ஆசையினாலும் உந்தப்பட்டு, ஆக்கிரமிப்பில் இறங்கிய வியத்நாம் இப்பொழுது பல்வேறு உள்நாட்டு பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளது. அமைச்சர்களை மாற்றுவதினால் அவலநிலை மாறப்போவதில்லை. அத்துமீறிய ஆக்கிரமிப்பை நிறுத்தி, சமாதான வாழ்க்கையை மேற்கொள்ளுவதினாலேயே நிலைமையைச் சாப்படுத்த முடியும். கம்பூச்சியா, லாவோஸ் ஆகிய நாடுகளில் விடுதலை இயக்கங்கள் வலுவுடைய வியத்நாம் மேலும் பல பிரச்சினைகளை அனுபவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. சோஷலிச மார்க்கத்தை கைவிட்டு, சமூக ஏகாதிபத்தியவாதிகளின் ஏவல் நாயாக மாறினால் வேறென்ன கதி கிடைக்கும்?

★

# ஆண்டபரம்...

4-ம் பக்கத் தொடர்

வேண்டும். இந்த வர்க்கத்தின்சார்பாகத்தான் 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை'' என்ற தாரக மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு தனிநாடு கேட்கப்படுகின்றது. தமிழர் கூட்டணித் தலைமையில் இருப்பவர்களின் குடும்பவரலாறே 'ஆண்ட பரம்பரை'யினரின் வரலாறுதான். நிலவுடமையாலும்—பணவுடமையாலும், ஆளும் வர்க்க அதிகார உடமையாலும் தாழ்த்தப்பட்ட மக்களை மனிதர்களாக அன்றி வாய்பேசும் 'மிருகங்களாக' நடாத்திய பரம்பரைகளின் வழித்தோன்றல்கள் தற்போதைய தமிழர் கூட்டணியின் தலைமையாகும். இன்றைய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் உடையார், மணியகாரன், முதலியார், விதானையார்போன்ற ஆண்ட பரம்பரையினரின் வாரிசுகளாகவே உள்ளனர். இவர்களது பேரன்—பூட்டன்மார் தாழ்த்தப்பட்ட மக்களை நேரடியாகவே கட்டியாண்டனர். ஆனால் இன்று இவர்கள் மறைமுகமாகக் கட்டியாள நினைக்கின்றனர். இன்றும் பல குடியேற்றத் திட்டங்கள் பிரேமதாசாவின் நவீன சேரியாக விளங்கும் வீடமைப்புத் திட்டங்கள் என்பனவற்றில் இந்த ஆண்ட பரம்பரையினரின் பெயர்கள் பொறிக்கப்படுகின்றன.

இத்தகைய தமிழர் கூட்டணித் தலைமையாக விளங்குபவர்கள் தமது வர்க்க சுபோகத்திற்காக தமிழ் மக்களை ஏமாற்றும் அதேவேளை தாழ்த்தப்பட்ட மக்களையும் ஏமாற்ற அவர்கள் மத்தியில் தமக்கு ஆட்கள் வைத்திருக்கின்றனர். பாராளுமன்றத்திலும், மாநகர சபையிலும் ஏனைய உள்ளூர் ஸ்தாபனங்களிலும் இந்த ஆண்ட பரம்பரையினர்க்கு 'அடிமைச் சேவகம்' செய்வதற்கு ஆட்கள் இருக்கவே செய்கின்றனர். இந்த அடிமைகளுக்கு தமது சமூக மக்கள் பற்றி எள்ளளவும் அக்கறையில்லை. தமது எஜமானர்களை மனம் குளிரச் செய்து எப்படியாவது சொத்துச் சேர்த்து சுகபோகம் அனுபவித்தால் போதும் என்பதே அவர்களின் நோக்கமாகும். அதேபோல் கூட்டணித் தலைமையானது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் தனக்கு ஆள் எடுக்கும்போது அந்த மக்களுடன் தொடர்பற்று இருக்கும்—வர்க்கரீதியில் வசதி படைத்தவர்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். ஏனெனில் அவர்கள்தான் என்றென்றும் அடிமை விசுவாசத்துடன் எஜமானர்களுக்கு முன்னால் தலைசொறிந்து நிற்கக் கூடியவர் என்பது கூட்டணித் தலைமைக்குத் தெரிந்ததேயாகும். இந்தவகையில் தான் இராஜசிங்கத்தை, சேவியரை, செல்லத்துரை போன்ற வசதிபடைத்த—ஆனால் தாழ்த்தப்பட்ட 'லேபல்கள்' ஒட்டியவர்களை தமிழர் கூட்டணித் தலைமை அடிமை கொண்டுள்ளது. இவர்கள் பாராளுமன்றம், மாநகரசபை என்பனவற்றில் இடையிடையே தமது 'அடிமை விசுவாசத்தை' கூட்டணிக்குத் தெரிவித்து பேச்சுக்களோ அறிக்கைகளோ விட்டுக் கொண்டிருப்பார்கள்.

அண்மையில் தமிழர் கூட்டணியின் குட்டித் 'தமிழ் ஈழப் பாராளுமன்றம்' என கனவுகாணும் இராசா விசுவநாதன் தலைமையிலான மாநகரசபை நடாத்திய சுகாதார விழாவில் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் அப்பட்டமாகவே புறக்கணிக்கப் பட்டனர். ஆனால் ஆண்ட பரம்பரையினரின் சூழ்ச்சிகள் அம்பலமாவதைச் சகிக்க முடியாத அடிமையாகவுள்ள உதவி மேயர் அறிக்கைகள் விட்டுச் சமாளித்து தனது விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டது எல்லாரும் அறிந்ததே. தட்டித்தவறி தனிநாடு கிடைத்தால் ஐந்து இலட்சம் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டுமன்றி ஏனைய உழைக்கும் மக்களும் அதோகதியாக வேண்டியதுதான்.

எனவே சாதியை மடியில் கட்டிக்கொண்டு சாதி ஒழிப்போம் எனச் சன்னதம் கொள்ளும் தமிழர் கூட்டணியினரால் ஒருபோதும் சாதியை—தீண்டாமையை ஒழிக்க முடியாது. அதற்குப் பதிலாக இந்த ஆண்ட பரம்பரையினரால் இப்பொழுதும் பேணிப் பாதுகாக்கப்படும் சாதியின் ஆணிவேரை தகர்க்கும் பாதைகளிலான புரட்சிகரமான வர்க்கப் போராட்டம்தான் ஒடுக்கப்பட்ட மக்களை மேலும் சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து வாழச் செய்யும் பாதையாக இருக்க முடியும்.

# உரத்தின் விலை உயர்வால் விவசாயிகளுக்குப் பேரிடி!

நாட்டு மக்கள் அனைவரையும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு என்ற பொதுவான தாக்குதலால் நிலைகுலையச் செய்துள்ள அரசாங்கம் ஒவ்வொரு துறைகளையும் சேர்ந்த மக்களைத் தனித்தனியேயும் தாக்கி வருகின்றது. இந்த வகையில் நமது நாட்டின் பெரும்பகுதியான மக்கள் ஈடுபடும் விவசாயத்திற்கு அரசு பேரிடியைக் கொடுத்துள்ளது. அதாவது விவசாயத்திற்குப் பாவிக்கப்படும் உரவகைகளின் விலைகள் யாவற்றையும் ஈவிரக்கமின்றி நூற்றுக்குமேற்பட்ட வீதத்தால் அதிகரித்துள்ளது. உதாரணமாக ஐம்பது கிலோ நிறும் கொண்ட ஒரு பைக்கற் யூரியா உரத்தின் விலையை 49 ரூபாவிலிருந்து ரூ. 107-50 சதத்திற்கும் தயவு தாட்சண்யமின்றி அரசு உயர்த்தியுள்ளது. மரக்கறி வகை உரம் ரூ. 56-50 சதத்திலிருந்து 107-50 சதத்திற்கு உயர்த்தி உள்ளது. இதே போன்று ஏனைய உரவகைகளையும் நூறு ரூபாவுக்கு மேல் உயர்த்தியுள்ளது. அதேவேளை இவ்வாறு உயர்த்தப்பட்ட உரவிலை உயர்வுக்கு ஈடாக நெல்லுக்கு மட்டும் புசல் ஒன்றுக்கு ரூ. 2-50 உத்தரவாத விலையில் அரசு அதிகரிப்புச் செய்துள்ளது. இது வெறும் ஏமாற்றும் கண்துடைப்பும் என்பது விவசாயிகளுக்கு புரியாத ஒன்றல்ல.

உரவிலை உயர்வால் சகல விதமான விவசாய உற்பத்திகளும் ஸ்தம்பித நிலையடையும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக உப-உணவு வகைகளையும் நாட்டின் தேவைக்காக மரக்கறி வகைகளையும் உற்பத்திசெய்யும் விவசாயிகளை அரசு இந்த விலையுயர்வால் உதைத்து வீழ்த்தியுள்ளது. ஏற்கனவே கட்டுப்பாடற்ற இறக்குமதிக்கொள்கையாலும், எரிபொருள்விலை அதிகரிப்பாலும் இக்குழிக்காடி நிற்கும் விவசாயிகள் தற்போதைய உரவிலை உயர்வால் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தொழிலாளி வர்க்கத்தை அடக்கி டடிவாங்கி நடுத்தெருவில் நிறுத்தியுள்ள இந்தக் கேடுகெட்ட யூ. என். பி. அரசாங்கம் தற்போது விவசாயிகள்மீது தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. விவசாயிகளை அடித்து நிலத்தில் வீழ்த்திவிட்டு மகாவலி அபிவிருத்தி பற்றியும் மண்ணுங்கட்டி அபிவிருத்திபற்றியும் கோஷம் எழுப்புவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது. ஆனால் நமது நாட்டு விவசாயிகள் யூ. என். பி. ஆட்சியில் அபிவிருத்திகோஷத்தின் சுயரூபத்தை இதனால் தெரிந்து கொண்டுள்ளனர். யூ. என். பி.யின் அபிவிருத்தி சொந்த உடைய உள்நாட்டு — வெளிநாட்டுப் பெருச்சாளிகளுக்கு மட்டுமே அன்றி சாதாரண தொழிலாளர் விவசாயிகளுக்கல்ல என்பதை தற்போது நன்கு புரிந்து வருகின்றனர். விவசாயிகளுக்கு கொடுத்துள்ள தாக்குதல்களுக்கு பதிலடியை யூ. என். பி. ஆட்சி பெற்றுக்கொள்ளும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

# அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மக்கள் அவதி!

## லஞ்சமும் ஊழலும் தலைவிரித்தாட்டம்

யூ. என். பி. ஆட்சி பதவிக்கு வந்து மூன்றரை ஆண்டுகளில் அரசாங்கத் திணைக்களங்கள் பல நிர்வாக சீர்கேட்டினால் சீர்குலைந்துள்ளதை அடிக்கடி பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றுள் மக்களை நேரடியாகப் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ள ஒரு பகுதி அரசாங்க ஆஸ்பத்திரிகளாகும். இங்கே மக்கள்படும் அவதிகளுக்கு எல்லையே கிடையாது. யூ. என். பி. பதவிக்கு வந்தவுடன் முந்திய அரசாங்கம் ஆஸ்பத்திரிகளில் பொதுமக்களிடம் இருந்து அறவிட்ட 25 சதத்தை இரத்துச்செய்து ஏதோ பெரும் சலுகைஅளித்ததாக காட்டிக்கொண்டது, ஆனால் அதேவேளை அரசாங்க டாக்டர்கள் வெளியில்தாராளமாக நோயாளர்களை பணம் வாங்கிப் பார்வையிடுவதற்கு அனுமதித்தது. இதனால் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்களின்மீதும், ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் மீதும் டாக்டர்களுக்கு இருந்த அக்கறை இயல்பாகவே குறைந்துகொண்டு போகும் நிலை உருவாகியது. அதுமட்டுமன்றி வெளியில் ஒரு டாக்டரைப் பணம்கொடுத்து சந்தித்து (சட்டரீதியான லஞ்சம்) பின்பு, வார்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றாலே அதிகமாக நோயாளர்கள் கவனிக்கப்படுவார்கள் என்ற நியதி இன்று சகல மக்கள் மத்தியிலும் பேசப்படும் ஒரு செயலாகிவிட்டது. இன்னும் சில அரசாங்க டாக்டர்கள் வார்டுகளில் தங்கி இருக்கும் நோயாளர்களிடம் மறைமுகமாகப் பெரும் தொகைப் பணத்தைப் பெறுகின்றார்கள் என்றும் பேசப்படுகிறது. அதற்கு அவர்கள் கூறும் நியாயம் எம்மைவெளிக்க தனியார் மருத்துவ மனைகளுக்குப் பெருந் தொகையில் செலவு செய்வதற்குப் பதிலாக எமக்கு அதில் ஒரு பகுதியை தாலும் தந்தால் என்ன என்பதே ஆகும்.

அதேவேளை [illegible] யுடனும், [illegible] யுடனும் [illegible] மையுடனும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளர்களைக் கவனிக்கும் டாக்டர்கள் இருக்கவே செய்கின்றார்கள். அத்தகைய டாக்டர்கள் [illegible] ஏனைய சிற்றூழியர்களின் நேர்மையான சேவைக்கு ஏற்ற சலுகைகளை அரசாங்கம் கொடுக்கத் தவறுவதால் அத்தகைய நல்லவர்கள்கூட மனவிரக்திப்பட்டு நாட்டை விட்டுப் போய்விடவும் சிந்திக்கின்றனர்.

மேலும் போதிய மருந்துக்கள் ஆஸ்பத்திரிகளுக்கு அரசு வழங்குவதில்லை. [illegible] கொடுத்தே மக்களை வரவேண்டியுள்ளது. இன்னும் ஏதாவது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மக்கள் பெற்றுக்கொள்ளவேண்டுமாயின் லஞ்சம் கொடுத்தாவது பெற வேண்டும் என்ற நிலை நிலவு கின்றது. நகரங்களிலுள்ள பெரிய அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நிலைமை இவ்வாறாயின் கிராம மட்டத்திலான அரசாங்க மருத்துவ மனைகளில் மக்கள் படும் அவதி சொல்லும் தரமன்று. 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' போல் அரசாங்கம் தனியார்துறைக்கும், பணக்காரர்களுக்கும், வசதிபடைத்தோருக்கும், சகல சலுகைகளையும் அளித்து சாதாரண மக்களைத் துன்புறுத்தும் போது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் மட்டும் சாதாரண மக்கட்கு சலுகைகள் கிடைக்க முடியாதுதானே. தவறு ஆட்சியிடம் அல்லவா உண்டு!

## ஜே. ஆரின் சிங்கப்பூர் எமக்கு வேண்டாம்

1-ம் பக்கத் தொடர்

கடந்த மூன்றரண்டு கால நடவடிக்கைகளால் நமது நாடும் மக்களும் அனுபவித்துள்ள கொடுமைகளும் கஷ்டங்களும் அடக்கு முறைகளும் சொல்லில் அடங்காதவையாகும். சிங்கப்பூர்ப் பாணியைப் பின்பற்றமுற்பட்ட நடவடிக்கைகளால் நமது நாடு இத்தனை கஷ்டங்களையும் கொடுமைகளையும், அடக்கு முறைகளையும் அனுபவிக்க நேரிட்டது என்றால் அந்த சிங்கப்பூரில் என்ன நடைபெறுகின்றது என்பதையும் அந்த நாட்டின் சாதாரண மக்கள் எத்தனை கொடுமைகளின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என்பதையும் சற்று சிந்திக்கக்கூடிய எவருமே புரிந்துகொள்வார்கள்.

அந்நிய இராட்சத ஏகபோகக் கம்பனிகளின் இரும்புப் பிடியில்தான் இன்றைய சிங்கப்பூர் இருக்கின்றது. உள்நாட்டின் பெருந் ஏகபோக முதலாளிகளின் கையில் அந்நாட்டின் அரசியல் அதிகாரம் இருக்கின்றது. சனநாயகம் என்ற பெயரில் பாசிச சர்வாதிகாரம் அரசோச்சுகின்றது. சாதாரண உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலை படுமோசமானதாக இருக்கின்றது. தொழிலாள வர்க்கம்திரத்தரஅடக்குமுறையின் கீழ் வேலைவாங்கப்படுகின்றது. முற்போக்கு சக்திகளினதோ அன்றி சனநாயக சக்திகளின் குரல்களோ பயங்கரமானதாகக் காட்டப்படுகின்றது. சாதாரண சனநாயக உரிமைகளைப்பற்றி யாராவது பேசினாலும் கூட விசாரணையற்ற சிறைக் கூடங்களில் தள்ளப்படுகின்றனர். தொழிற்சங்க உரிமைகள், பொருளாதாரக் கோரிக்கைகள், சனநாயக அரசியல் இயக்கங்கள் என்பன கனவுக்குரியன மட்டுமே. அவற்றை யாராவது நடைமுறைப்படுத்த முனைந்தால் ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைகளையே சந்திக்க வேண்டும். இந்நிலையில் சனநாயக இயக்கங்கள்கூட இரகசியமான வழிகளிலேயே அங்கு இயங்க வேண்டியுள்ளது.

சிங்கப்பூரின் முன்னேற்றத்தை அங்கு எழும்பியுள்ள பிரமிப்பையூட்டும் நவீனகட்டிடங்களையும், இராட்சத தொழிற்சாலைகளின் வெளி அமைப்புகளையும், முதலாளித்துவ அமைப்பிலான வீதிகள், பாலங்கள், கண்கவர் இரவு மின்ஒளிக்காட்சிகளையும், வைத்துக்கொண்டு அளவிட முடியாது. இத்தனைக்கும் பின்னால் கொடிய வறுமை, வேலை இல்லை, பசி பட்டினி, தீராத நோய்கள், விபச்சாரமும், கொலை கொள்ளைகளும் ஏனைய முதலாளித்துவம் விளைவிக்கும் கேடுகளும்தான் சிங்கப்பூரின் அபிவிருத்தி எனப்படுவதாகும்.

அந்நிய ஏகபோக முதலாளிகளினதும், உள்நாட்டுப் பணக்காரர்களினதும், பொழுதுபோக்கு செல்வந்தர்கள் வியாபாரிகளினது சொர்க்கபுரி சிங்கப்பூர் என்பது உண்மைதான்: ஆனால் சிங்கப்பூரின் தொழிலாளி வர்க்கத்திற்கும் ஏனைய உழைக்கும் மக்களுக்கும் சிங்கப்பூர் என்பது கொடுமை நிறைந்த நரகமாகவே இருந்துவருகின்றது.

இத்தகைய நரகத்தை முழுமையாக இங்கு கொண்டுவரவே ஜே. ஆர். கங்கணம் கட்டியுள்ளார். அந்த கொடுமை மிக்க அமைப்பின் சில அம்சங்கள் ஏற்கனவே இறக்குமதியாக்கப்பட்டு அதனால் நமதுநாட்டு மக்கள் எண்ணற்ற கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். மிகுதியையும் நடைமுறைப்படுத்த முன்வரும் கட்டத்தில் நமது மக்களுக்கு மீட்சியே இருக்காது.

எனவே ஜே. ஆர். ரின் சிங்கப்பூராக்கும் திட்டமானது தொழிலாளி வர்க்கத்தினாலும் மக்களாலும் திடமாக எதிர்க்கப்படல் வேண்டும். அன்று டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையிலும் பின் டட்லி சேனநாயக்காவின் தலைமையிலும் இலங்கையை 'குட்டி இங்கிலாந்தாக' மாற்றும் திட்டத்தை இலங்கை மக்கள் ஏற்கனவே தோற்கடித்துவிட்டார்கள். அந்த தோல்விகளை டதைத் [illegible] வேறொரு வழியால் ஜே. ஆர். நடைமுறைக்குக் கொண்டுவர முயல்கிறார். ஏகாதிபத்திய எதிர்ப்பு பிற்போக்கு முதலாளித்துவ எதிர்ப்பு என்பவற்றில் தேசபக்த சனநாயக முற்போக்கு இயக்கங்களை பல கஷ்டங்களின் மத்தியில் முன்னெடுத்து காலத்திற்குக் காலம் பல வெற்றிகளைப் பெற்ற இலங்கைத் தொழிலாளி வர்க்கமும் மக்களும் நிச்சயம் ஜே. ஆரின் சூழ்ச்சிகரமான சிங்கப்பூராக்கும் திட்டத்தை எதிர்த்து முறியடிப்பார்கள் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

## பிரதமரின் வடபகுதி..

1-ம் பக்கத் தொடர்

நேரடியாக யாழ்ப்பாணம் வந்து பல வர்ணங்களைக் கொண்டதான சுவரொட்டிகளை ஒட்டுவித்து பிரதமரின் விஜயத்தை வெற்றியாக்க முயன்றூர்.

இத்தகையோரின் பிரச்சாரங்கள், கேளிக்கைகள் மத்தியிலும் பிரதமரின் விஜயம் பிசுபிசுத்த ஒன்றாகவே காணப்பட்டது. வடபகுதி மக்களின் யூ.என்.பி. எதிர்ப்பும் — அதிருப்தியும் அப்பட்டமாகவே வெளிப்பட்டது. எமது இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வட பிரதேச கமிட்டி "பிரதமர்யார்?" "யூ. என். பி. செய்தவை என்ன?" என்ற தலைப்பிட்ட துண்டுப் பிரசுரத்தை மக்கள் மத்தியில் விநியோகித்து மக்களின் எதிர்ப்புணர்விற்கு வழிகாட்டியது. எதிர்ப்புக் கோஷங்களுடனான தேசபக்தன் என்ற பெயரைபொறித்த சுவரொட்டிகள் பிரதமரின் வருகையைஎதிர்த்தும், 'இங்கு வரவேண்டாம் திரும்பிப் போ' எனவும் கூறி வடபகுதி பூராவும் ஒட்டப்பட்டிருந்தன. இதைவிட 'தமிழின விரோத ஜனநாயக விரோத — தொழிலாள விரோத — யூ. என். பி. பிரதமரின் வருகையைப் பகிஷ்கரிக்குமாறு கோரும் சுவரொட்டியும் அச்சிடப்பட்டு வடபகுதி பூராவும் ஒட்டப்பட்டிருந்தன. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் 29ஆம் 30 ஆம் திகதிகளில் பூரண பகிஷ்கரிப்பைநடாத்தி தமது எதிர்ப்பையும் அதிருப்தியையும் தெரிவித்து கொண்டனர். 30ஆம் திகதி யூ. என். பி. யை ஆதரிக்கும் பெரும் முதலாளிகளின் ஓரிரு கடைகளைத் தவிர சகல கடைகளும் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலைகள் யாவும் பகிஷ்கரிக்கப்பட்டன. இதை முன்கூட்டியே அறிந்துகொண்டபடியால் அரசாங்க அதிகாரிகள் பிரதமரின் விஜயத்தின் போது பாடசாலை மாணவர்களைப் பயன்படுத்தும் திட்டத்தைக் கைவிட்டிருந்தனர். இவ்வாறான மக்களின் எதுவித அக்கறையுமற்ற நிலையில் எதிர்ப்பும் அதிருப்தியும் வலுவடைந்த நிலையில் பிரதமரின் வடபகுதி விஜயம் உண்மையில் தோல்விநிலையிலேயே முடிவடைந்தது.

அச்சுப்பதிப்பு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. [illegible]தினம் 15/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.